

திருமூர்த்தி
மகரிஷி
பரஞ்சோதியார்

அருளிய

# பிரபஞ்ச ஜோதி

மனவிருளைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைப்
போதிக்கும் உயர் தத்துவ நூல்

இரண்டாம் பதிப்பு – 1999

# இலக்குரை

வளர்க மெய்ஞ்ஞானம்,
வாழ்க சமாதானம்,
உலக நலம் காப்போம்,
உலக அமைதி காப்போம்.
கி.பி. இரண்டாயிரத்திற்குள்
சத்திய யுகம் அமைப்போம்.
சந்தோஷம்! சந்தோஷம்!
சந்தோஷம்!

திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார் அருளிய

# பிரபஞ்ச ஜோதி

(சத்திய யுக வேதம்)

மனவிருளைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைப்
போதிக்கும் உயர் தத்துவ நூல்

இரண்டாம் பதிப்பு
டிசம்பர் 1999



உலக சமாதான அறக்கட்டளை
ஸ்ரீபரஞ்சோதி நகர், திருமூர்த்தி மலை - **642 112**
உடுமலைப்பேட்டை தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம்
தமிழ் நாடு, இந்தியா

First edition (39 pages) : September 1998 (1,000 copies)
Second edition (110 pages) : December 1999 (1,000 copies)

Compiled and published by Meignanasiriyar William Bhoopala Joseph, President, Universal Peace Sanctuary, Malaysia, on behalf of:

**Universal Peace Foundation,**

**Sri Paranjothi Nagar,**

**Tirumurthi Hills - 642 112,**

**Udumalaippettai Taluk,**

**Coimbatore District,**

**Tamil Nadu, India.**

**: 00-91-4252-65666 (Tirumurthi Hills Gurukulam)**

**: 00-91-424-213383 (Divine Matriculation School, Erode)**

**E-mail : santosam@md4.vsnl.net.in**

**Price in Malaysia : RM 6.00**

**Price in India : Rs 50.00**

**Printed in Malaysia**

*Printed by:*

*Percetakan Fine Arts Sdn. Bhd.,*
*282 Jalan Tun Sambanthan (Brickfields) 50470 Kuala Lumpur, Malaysia.*
*Telephone: 603- 2272-4064. Fax: 603- 2272-4063 E-Mail: Wolves@pd.jaring.my*

# பொருளடக்கம்


தொகுப்பாசிரியரின் முதல் உரை 4

தொகுப்பாசிரியரின் இரண்டாம் உரை 5

சத்திய யுக சிந்தனைகள் 7

உயர் ஞான தீபம் 31

ஆன்மாவின் அறைகூவல் 48

வழிபாட்டின் உட்பொருள் 53

குண்டலினி யோக தியானம் 65

திருமூர்த்தம் 70

மனிதனின் உண்மை நிலை 82

விளக்கக் குறிப்புகள் 96

# தொகுப்பாசிரியரின் முதல் உரை

ஒரு சிறந்த தத்துவத் தவஞானியாக விளங்கும் திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார் அவர்களின் ஆன்மிக சொற்பொழிவுகளை *உயர் ஞான தீபம்* என்னும் மாதாந்திரப் பத்திரிக்கையில் வாசிக்கும் பொழுதெல்லாம் ஓர் எண்ணம் என் மனத்தில் எழுவதுண்டு.

மகரிஷியின் சொற்பொழிவுகளில் மிளிரும் ஆழ்ந்த உண்மைகளையும் தத்துவ ஞானோபதேசங்களையும் சேகரித்து, அவற்றை வெவ்வேறு தலைப்புகளின் கீழ் பிரித்து, சீராக அச்சடித்து, சிறு சிறு நூல்களாக வெளியிட்டால் உலக மக்கள் வாசித்து நல்ல பயன் அடைவார்களே என்ற எண்ணம் தான் அது.

ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு முன்பு எனது ஆழ்மனத்தில் விதைக்கப்பட்ட இந்த எண்ணம் இன்று பலன் அளிக்கத் துவங்கியிருக்கிறது.

புனிதமான இப்பணியை நான் துவங்கிய பொழுது பல சந்தேகங்கள் என் மனத்தில் அவ்வப்போது உதித்தன. இருப்பினும், சாதாரண மனிதனாகிய என்னை இறைவன் ஒரு கருவியாக உபயோகித்து அவனுடைய பிரபஞ்ச ஜோதி எனும் இந்த சத்திய யுக வேதத்தை தொகுத்து வெளியிட சித்தம் கொண்டிருக்கிறான் என்பதை முழுமையாக உணர்ந்த நிலையில் நான் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

திருமூர்த்தி மகரிஷி அவர்களின் ஆசியோடும் அனுமதியோடும் ஆரம்பிக்கப் பட்ட இப்பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். இந்த சத்திய யுக வேதம் முழுமை பெறும் பொழுது எழு நூறு பக்கங்களை உள்ளடக்கிய பெரிய தத்துவ நூலாக அது விளங்கும்.

மனவிருளைப் போக்கும் உயர் ஞான தீபமாக, வழி காட்டும் கலங்கரை விளக்கமாக மகரிஷியின் போதனைகள் அமைந்திருக்கின்றன. அவர் அருளிய *பிரபஞ்ச ஜோதி* நம்மெல்லோரையும் சத்திய யுகத்திற்கு அழைத்துச் செல்லட்டும். நம் மனக் கதவைத் திறந்து இவ்வொளியை பெற்றுக் கொள்வோமாக!

சந்தோஷம்!

மெய்ஞ்ஞானாசிரியர் வில்லியம் பூபால ஜோஸப்

24 Taman Kudamas, Jalan Damai, 35000 Tapah, Perak, Malaysia.

E-mail: wbjoseph@tm.net.my

Telephone Nos.: 60-3-8733-8279 & 60-5-401-1486

செப்டம்பர் **11, 1998**

# தொகுப்பாசிரியரின் இரண்டாம் உரை

முப்பத்தொன்பது பக்கங்களோடு கடந்த ஆண்டு வெளியீடு கண்ட *பிரபஞ்ச ஜோதி* இப்பொழுது 110 பக்கங்களைத்தாங்கி இரண்டாம் பதிப்பாக உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

திருவள்ளுவரின் திருக்குறளைப் போன்று, திருமூர்த்தி மகரிஷியின் *பிரபஞ்ச ஜோதியும்* உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொது மறையாக விளங்குகிறது. இனம், மொழி, மதம், நாடு போன்ற பேதங்களைக் கடந்த நிலையில், மனித நேயத்தையும் இறை உணர்வையும் அடிப்படையாகக் கொண்டு புத்தம் புதிய ஓர் உலகை சிருஷ்டிப்பதற்கு இந்நூல் வழி காட்டுகிறது.

பல்வேறு குண அழுக்குகளால் சூழப்பட்டு பரிசுத்தத் தன்மையை இழந்து நிற்கும் மக்கள் அனைவருக்கும் ஓர் ஒளிமயமான, தெய்வீகத் தன்மை பொருந்திய எதிர்காலத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியாரின் சித்தமாகும்.

"உங்கள் உடலையும் உள்ளத்தையும் பிரபஞ்சத்தை இயக்கும் பரம் பொருளுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். அப்பொழுது அந்தப் பரம்பொருளின் தூய நிலைகளைப் பெறுவீர்கள்" என்று திருமூர்த்தி மகரிஷி நம்மனைவரிடமும் கூறுகின்றார். மன இருளைப் போக்கிக்கொள்வதற்கும், பரம்பொருளின் தூய நிலைகளை அடைவதற்கும் தெய்வீக ஒளி நம்மெல்லோருக்கும் தேவைப் படுகிறது. அத்தகைய தெய்வீக ஒளிதான் மகரிஷி பரஞ்சோதியார் அருளிய *பிரபஞ்ச ஜோதி* என்னும் இந்த சத்திய யுக வேதமாகும். இறை தத்துவத்தை உணர்ந்துகொள்வதற்கும், தத்துவ விசாரம் செய்வதற்கும் இது சிறந்த நூல். மன மகிழ்ச்சியோடு இதை வாசித்து பயன் பெறுவோமாக!

சந்தோஷம்!

மெய்ஞ்ஞானாசிரியர் வில்லியம் பூபால ஜோஸஃப்,


24, Taman Kudamas, Jalan Damai, 35000 Tapah, Perak, Malaysia.

E-mail: wbjoseph@tm.net.my

Telephone Nos: 03-8733-8279 & 05-401-1486



டிசம்பர் 11, 1999.



அன்பே உலகம், அன்பே உயிர், அன்பே கடவுள் என்பதனை உலகிற்கு உணர்த்தி ஓருலக இறையாட்சியை ஏற்படுத்திடுவோம். அயராது தொண்டு புரியும் உலகத் தலைவர்களையும் ஆன்றோர்களையும் தவ சிரேஷ்டர்களையும் நாம் வாழ்த்திடுவோம்,

▶ ***சத்திய யுக சிந்தனைகள் 1:4***

# திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார்

அருளிய

# சத்திய யுக சிந்தனைகள்

*(<u>தொகுப்பாசிரியரின் குறிப்பு:</u> முடங்கிக்கிடக்கும் நம் ஆற்றல்களை முடுக்கி விடுவதற்கும், கடமைகளை செவ்வனே செய்வதற்கும், புதிய உலகை சிருஷ்டிப்பதற்கும் புதிய சிந்தனைகள் நம்மனைவருக்கும் தேவைப்படுகின்றன. அத்தகைய சிந்தனைகளை இப்பகுதி தாங்கி வருகின்றது.)*

## அத்தியாயம் 1

(மகரிஷி எழுதிய "இருள் நீங்கட்டும், அருள் பொழியட்டும்" எனும் தலையங்கத்திலிருந்து தொகுக்கப்பட்டது. டிசம்பர் 1991).

1. **உலக மக்களே! இருள் நீங்கி அருள் பொழியும் நேரம் வந்து விட்டது. உங்கள் அறியாமைத் துயிலிலிருந்து விழித்துக் கொள்ளுங்கள். இறையரசு ஏற்படும் இத்தருணத்தில் எழுந்து செயல் படுங்கள்.**

2. **ஞானக் கண்ணைப் பெற்ற நீங்கள் அடங்கியது போதும். வீறு கொண்டு எழுவீர். முடங்கிக் கிடக்கும் ஆற்றல்களை முடுக்கி விடுவீர்.**

3. **அதர்மத்தை நீக்கி தர்மத்தைக் காப்போம். அநீதியை அழித்து நீதியை நிலை நிறுத்துவோம். பொய்மை எனும் இருளிலிருந்து உண்மை எனும் வெளிச்சத்திற்கு இவ்வுலகை அழைத்துச் செல்வோம். சத்திய யுகத்தை அமைப்போம்.**

4. அன்பே உலகம், அன்பே உயிர், அன்பே கடவுள் என்பதனை உலகிற்கு உணர்த்தி ஒருலக அருளாட்சியை ஏற்படுத்திடுவோம். அயராது தொண்டு புரியும் உலகத் தலைவர்களையும் ஆன்றோர்களையும் தவ சிரேஷ்டர்களையும் மனமுவந்து நாம் வாழ்த்திடுவோம்.

5. உலக நலம் காத்திடுவோம். இயற்கை அன்னையின் அருள் பெற்றிடுவோம். விவசாயப் புரட்சியை ஏற்படுத்திடுவோம். பசிப்பிணி இல்லை என்ற நிலையை உருவாக்கிடுவோம்.[1]

6. கடமைகளைச் செவ்வனே செய்வோம். உலக நல மகா வேள்விகளில் பங்கு பெற்று புதியதோர் உலகம் செய்திடுவோம்.

7. ஒன்று சேர்வோம். வாழ்வோம். வாழ்விப்போம்.

# சத்திய யுக சிந்தனைகள்

## அத்தியாயம் 2

(கோலாலம்பூர் ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் குருஜீ ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி 1992)

1. இறைவனை ஆராதிக்க இந்த ஆலயத்தில் கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் நான் இறைவனாகவே காண்கின்றேன்.

[1] 1999ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் உலக ஜனத்தொகை 600 கோடியை எட்டியது. ஐ.நா. கணக்குப்படி சுமார் 120 கோடி மக்கள் மிகவும் ஏழ்மையான நிலைகளில் வாழ்கின்றனர். அவர்களின் அன்றாட வருமானம் தலா ஒரு அமெரிக்க டாலர் மட்டுமே.

2. இறையின் சொரூபமான நீங்கள் இறையமுதத்தைப் பருகி உடல் நலமும் உள நலமும் நீடித்த ஆயுளும் பெற்று அறிவுடன் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

3. உங்கள் உடலையும் உள்ளத்தையும் பிரபஞ்சத்தை இயக்கும் பரம் பொருளுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். அப்பொழுது அந்த பரம்பொருளின் தூய நிலைகளைப் பெறுவீர்கள்.

4. நிலைத்த மனத்தோடு எதை சம்யமம் செய்கிறீர்களோ, அதுவாகவே நீங்கள் மாறி விடுவீர்கள்.

5. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்த இறைவனை உங்கள் மனத்தில் நிறுத்துங்கள். அண்டத்திலுள்ள அவனை பிண்டத்திலும் காண்பீர்கள். இறைத் தன்மையை நீங்கள் பெறுவீர்கள்.

6. பிறக்கும் பொழுது எல்லா உயிரும் பரிசுத்தமாகவே பிறக்கின்றது. பிறந்த பின், சுற்றுப்புற சூழல்களினால் உந்தப்பட்டு தீய குணங்களையும் பல்வேறு மாசுகளையும் அது சேர்த்துக் கொள்கிறது.

7. இறையருளாலும் குருவருளாலும் மீண்டும் அந்த உயிர் பரிசுத்தம் அடைகிறது.

# சத்திய யுக சிந்தனைகள்

## அத்தியாயம் 3

1. ஞானத்தையும் அரசியலையும் ஒன்றிணைத்து இந்த உலகை உயர்த்துவோம்.

2. வெறும் அரசியல்வாதிகளாக மட்டும் இருக்கும் ஆள்வோர்கள் அனைவரையும் ஆன்மிக நாட்டம் உடையவர்களாக மாற்றுவோம்.

3. ஆன்மிகச் செல்வர்களின் ஆதரவுடனும் ஆலோசனையுடனும் என்று அரசாட்சி நடக்கின்றதோ அன்றுதான் உலக சமாதானம் முழுமையாக ஏற்படும் என்ற உண்மையை உணர்த்துவோம்.

4. அரசியல்வாதிகளை நல்வழியில் நடத்திச் செல்வது ஞானியரின் கடமை. ஞானியர்களைக் காப்பாற்றுவது அரசியலாரின் கடமை.

5. தனி மனிதன் சமாதானம் அடைந்தால் சமுதாயம் சமாதானம் அடையும். சமுதாயம் சமாதானம் அடைந்தால் இந்த உலகம் சமாதானம் அடையும்.

6. "எல்லோரும் இன்புற்றிருக்கத் தொண்டு செய்யுங்கள், தொண்டு செய்யுங்கள்" என்று ஞானிகள் அடிக்கடி சொல்லிக் கொண்டே போகின்றார்கள்.

7. அரசியலாரும், "உலகம் சமாதானம் அடைய ஆவன செய்வோம்" என உரத்தக் குரலில் கூறிக் கொண்டே செல்கின்றார்கள்.

**8.** ஆனால் ஞானமும் அரசியலும் இன்னமும் ஒன்றுபடவில்லையே. எப்பொழுது இந்த அறிவும் ஆற்றலும் ஒன்றுபடுகின்றதோ, அப்பொழுதுதான் மக்கள் தத்தம் கடமைகளைச் செய்ய முடியும்.

**9.** எங்கே கடமைகள் ஆற்றப்படுகின்றதோ, அங்கேதான் அமைதியும் ஆனந்தமும் நிலவும்.

**10.** தன்னலங் கருதாது, நாட்டு மக்களின் உயர்வுக்காகவும் நலனுக்காகவும் உழைப்பதே தங்களின் தலையாய கடமையென்பதை உணர்ந்து நாட்டை ஆள்பவர்கள் செயல்படும் பொழுதுதான் மக்களிடையே அமைதியும் ஆனந்தமும் நிலவும்.

**11.** அரசனுக்கு ஆலோசனை கூற அன்று தன்னலமற்ற ராஜகுரு இருந்தார். நாட்டை ஆள்பவர்களுக்கு ஆலோசனை கூற இன்றும் தன்னலமற்ற ஆன்மிக அருளாளர்கள் இருக்கின்றார்கள்.

**12.** நாட்டை மாத்திரம் அல்ல, உலகையே ஆட்சி செய்யக் கூடிய ஆட்சி மன்றம் ஒன்று இருந்தால், அந்த ஆட்சி மன்றத்திற்கும் ஆலோசனை கூற ஆன்மிக அருளாளர்கள் ஆங்காங்கே இருக்கின்றார்கள்.

**13.** எந்த நாட்டில் விளைந்த விளைவாயினும் அதை எல்லா நாட்டினருக்கும் பகிர்ந்தளிக்கக் கூடிய உலக நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்று இந்த அருளாளர்கள் விரும்புகின்றார்கள்.[2]

**14.** உலக உயிர்கள் அனைத்தையும் தன் உயிர்போல் பாவிக்கக்கூடிய, நல்லாட்சியாக செயல்படக்கூடிய, உலக நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்பதே அருளாளர்களின் குறிக்கோள்.

---

[2] உலக சமாதான அறக்கட்டளையின் முக்கிய குறிக்கோள்களில் இதுவும் ஒன்றாகும்.

15. வெள்ளை உள்ளம் படைத்த செயல் வீரர்கள் உலகை நிர்வகிக்கும் பொழுது உலகில் பசிப்பிணி நீங்கும், பணத்திற்குள்ள மரியாதையும் குறையும்.

16. பல உருவ வழிபாடுகளைக் கடந்து அருபமான நிலைகளுக்குச் செல்லும்பொழுதுதான் கடவுள் தத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

17. இறை உணர்வு ஒன்றுதான் உலக மக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும். சகல பேதங்களையும் கடந்த உன்னதமான நிலைகளில் வாழ இறை உணர்வு நிச்சயம் வழி வகுக்கும்.

18. இந்த உண்மையை உணர்த்தும் பொருட்டே இங்கு ஞானக்கொடி கட்டப்பட்டிருக்கின்றது.

## சத்திய யுக சிந்தனைகள்

## அத்தியாயம் 4

(1991-ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற முழு நிலவு கூட்டத்திலும்,
1992-ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும் மகரிஷி கூறியவை.)

1. அன்பு பொறுமையானது, உண்மையானது. அன்பு நன்றியானது, நம்பிக்கையானது.

2. எதையும் எதிர் பாராமல் எப்பொழுதும் விட்டுக் கொடுப்பது அன்பு. பிறர் குற்றம் காணாதது அன்பு, பிறருக்கு உறுத்தாதது அன்பு.

**3. அன்புக்கு கர்வமில்லை, சுய நலமில்லை, அழிவுமில்லை. அன்பு பொறாமை அற்றது.**

**4. அன்பு இறைத் தன்மையுடையது, தெய்வீகமானது.**

**5. அதனால்தான், "அன்பே சிவம்", "God is Love", "கர்த்தர் அன்பாகவே இருக்கிறார்" என்றெல்லாம் கூறுகிறோம்.**

## சத்திய யுக சிந்தனைகள்
## அத்தியாயம் 5

**1. ஊரில் இறைவன் திருவுலா வருகிறது. உற்சாகத்தோடு உங்கள் தெருவாசலைப் பெருக்கி, நீர் தெளித்து, கோலமிட்டு தூய்மைப் படுத்துகிறீர்கள்.**

**2. தெருவில் திருவுலா வருவதைப்போல இவ்வுலகில் சத்திய யுக இறையாட்சி வரவிருக்கின்றது.**

**3. அதை வரவேற்க ஞானம் எனும் நீரைத் தெளியுங்கள். தேவைப்படும் இந்த ஞானத்தை தியானத்தின் வழியாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**4. அதே தியானத்தின் வழியாக உங்கள் ஆற்றலையும் வெளிப் படுத்துங்கள்.**

**5. உங்கள் திறமையை வளர்க்கும் கருவிகளான உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.**

6. நீங்கள் உங்கள் உள்ளங்களை தூய்மைப் படுத்தப்படுத்த உங்களுடைய தெய்வீக ஆற்றல்கள் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும்.

7. இப்பிரபஞ்சத்தை இயக்கும் உறுபொருள் எதுவோ, அதுவாகவே நீங்கள் இருக்கின்றீர்கள். அந்த உறுபொருள் உங்கள் உடலினுள்ளேதான் இருக்கிறது.

8. இப்பேருண்மைகளை என்று ஒருவன் நன்கு புரிந்துகொண்டு அவற்றிற்கேற்ப நடந்து கொள்கின்றானோ, அன்றே அவன் இவ்வுலகிலிருந்து மாறுபட்டவனாக, தனித்தன்மையுடையவனாக மாறுகின்றான்.

9. அவனை நன்மையும் அண்டுவதில்லை, தீமையும் அண்டுவதில்லை. அவனுக்கு இரவில்லை, பகலில்லை; அவனுக்கு வெப்பமுமில்லை, குளிருமில்லை.

10. அவன் காலத்தையும் இடத்தையும் கடந்தவனாக மாறி விடுகின்றான்.

# சத்திய யுக சிந்தனைகள்

## அத்தியாயம் 6

(முதல் தவ வெள்ளி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு. ஜனுவரி 7, 1992.)

1. அவரவர் மனங்களில் பல்வேறு மாசுகளை ஏற்படுத்திக் கொண்டு மக்கள் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

2. பக்கத்திலுள்ள இந்த ஊராட்சிக் கோட்டை மலையில் ஏறிப் பாருங்கள். மலையின் உச்சியிலிருந்து கீழ் நோக்கிப் பார்த்தால் இங்குள்ள வீடுகள் அனைத்தும் மிகவும் சிறியதாகத் தோன்றும்.

3. அதைப் போன்றே, அறிவின் மேல் நிலைக்கு நீங்கள் வரும் பொழுது இவ்வுலகப் பிரச்சனைகள் அனைத்தும் மிகவும் சிறிய பிரச்சனைகளாக, சாதாரணப் பிரச்சனைகளாக உங்களுக்குத் தோன்றும்.

4. பிரச்சனைகள் குறைய வேண்டுமென்றால், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

5. அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய மூன்றும் உங்களிடம் இருக்கின்றன. இவற்றை முறையாக பயன்படுத்தினால் ஆனந்தமும் அமைதியும் தானாகவே உங்களிடம் ஊற்றெடுக்கும்.

6. எனவே, இப்பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்த சந்தோஷ உணர்வு உங்களுக்காக சதா காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அனுபவப் பூர்வமாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

7. ஆனந்த மயமான அந்த இறையுணர்வு ஏற்றத்தாழ்வு பார்ப்பதில்லை.

8. ஏழையென்றும், பணக்காரனென்றும் அது பார்ப்பதில்லை. கற்றவன், கல்லாதவன் என்ற பேதமும் அதற்கில்லை. ஆண் என்றும் பெண் என்றும், வயோதிகன் என்றும் இளமையானவன் என்றும் அது வித்தியாசம் பாராட்டுவதில்லை !

9. யார் யார் அந்த இறையுணர்வுக்காக ஏங்குகின்றார்களோ, அவர்களுக்கு அது அருள் பாலிக்கின்றது. "அப்படியே ஆகட்டும்" என அது சதா சொல்லிக் கொண்டேயிருக்கின்றது.

10. அதனால்தான், நீங்கள் எதை விதைக்கின்றீர்களோ அதையே அறுவடை செய்கின்றீர்கள். நீங்கள் நல்லதை விதைத்தால் நல்லதையே அறுவடை செய்வீர்கள்.

11. இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும், பிறர் தர வருவதில்லை. இவையனைத்தும் உங்களிடமே இருக்கிறது.

## சத்திய யுக சிந்தனைகள்

## அத்தியாயம் 7


(முதல் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு, ஜனுவரி 7, 1992)

1. அத்திப்பழத்திற்குள் இருக்கும் சின்னஞ் சிறு விதைகளைப் போன்றதே நம் சூரியக் குடும்பம்.

2. நம் சூரியக் குடும்பத்தைப் போன்று, பிரம்மாண்டம், பேரண்டம், அகிலாண்டம் என்று பல அண்டங்கள் இப்பிரபஞ்சத்தில் சுற்றிக் கொண்டே இருக்கின்றன.

3. ஆனால் மக்களோ இன்னமும் இந்தப் பூமியைப் பற்றியே பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

4. பலர், அவரவர் வசிக்கும் சிறிய இடங்களைப் பார்த்து, "இது எனக்குச் சொந்தம், அது உனக்குச் சொந்தம்" என்று கூறிக் கொள்வதில் திருப்தி அடைகிறார்கள்.



உலகின் எந்தப் பகுதியிலும் வாழும் சுதந்திரம்
பறவைகளைப்போல் மனிதருக்குமுண்டு.
***சத்திய யுக சிந்தனைகள் 7:7***

5. வேறு சிலர், "இது எனது மாநிலம், அந்நிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ உரிமையில்லை" என உரிமை கொண்டாடுகின்றனர்.

6. கேவலமான இத்தகைய மனோபாவத்திலிருந்து மக்கள் விடுபட வேண்டும், மன மாசுகள் நீங்க வேண்டும். சகோதரத்துவமும் சமதர்ம நல்லுணர்வும் மக்கள் மனத்தில் தோன்றி வேரூன்ற வேண்டும்.

7. உலகின் எந்தப் பகுதியிலும் வாழும் சுதந்திரம் பறவைகளைப் போல் மனிதருக்குமுண்டு.

## சத்திய யுக சிந்தனைகள்


## அத்தியாயம் 8


(முதல் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு. ஜனுவரி 7, 1992)

1. விஞ்ஞானம் வேறு, மெய்ஞ்ஞானம் வேறு அல்ல. மெய்ஞ்ஞானத்தை நிரூபிப்பதுதான் விஞ்ஞானம்.

2. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பல கோள்களில் நம்மைப்போலவே அறிவில் தீட்சண்யமான சில ஜீவராசிகள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.[3]

[3] Compare this with Arthur. C. Clarke's most recent prediction:- "Year 2024 A.D.: Infra-red signals are detected coming from the center of the Milky Way Galaxy. They are obviously the product of a technologically advanced civilization , but all attempts to decipher them fail." (http://www.cnn.com/ASIANOW/asiaweek/99/0820/cs2.html)





இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பல கோள்களில் நம்மைப்போலவே அறிவில் தீட்சண்யமான சில ஜீவராசிகள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.

***சத்திய யுக சிந்தனைகள் 8:2***

**3.** நமது விஞ்ஞானம் அவர்களை நோக்கிச் செல்வதற்கு முன்பே, அவர்களுடைய விஞ்ஞானம் நம் பூமியை நோக்கி வந்து கொண்டு இருக்கிறது.

**4.** வேற்றுக் கிரக வாசிகளோடு ஏற்படக்கூடிய போரில் மனித குலம் மிகுதியாக அழியக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

**5.** இயற்கையைப் பாதுகாக்க நமக்கு இன்னமும் சரியாகத் தெரியவில்லை. சில வேளைகளில் தெரிந்திருந்தும் பாதுகாக்கத் தவறி விட்டோம்.

**6.** அதனால் இயற்கையின் சீற்றத்திற்கு நாம் ஆளாகி விட்டோம். இயற்கை அன்னையின் அரவணைப்பிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொண்டோம்.

**7.** நமது அலட்சியப் போக்கால் ஓசோன் படலத்தில் **(ozone layer)** துளை விழுந்து விட்டது. சூரிய மண்டலத்திலிருந்து பூமியை நோக்கி வரும் புற ஊதாக் கதிர்களை **(ultra-violet rays)** நன்றாக வடிகட்ட முடியாத நிலையில் இன்று ஓசோன் படலம் இருக்கிறது. இதனால் இப்பூமியில் பல துயர சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**8.** இதைக் கண்டு விஞ்ஞானிகளும் மெய்ஞ்ஞானிகளும் கண்ணீர் வடிக்கின்றனர்.

**9.** அதனால்தான், "விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பதிலாக மெய்ஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தால் சந்தோஷமாக இருந்திருப்பேனே" என

அங்கலாய்த்துக் கொள்ளும் விஞ்ஞானிகள் பலரை இன்று நாம் காண்கிறோம்.

# சத்திய யுக சிந்தனைகள்
# அத்தியாயம் 9

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீமஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி, 1992.)

1. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் சீராய் இருங்கள். உங்களை யாரும் ஒன்றும் செய்ய இயலாது.

2. நீங்கள் நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது, வல்லவர்களாகவும் நீங்கள் நிச்சயம் மாற வேண்டும்.

3. தெய்வீகத் தன்மையுடைய நல்லவன் தனது எண்ணத்தை செயல் படுத்தக்கூடிய வீரதீரனாக மாறும் பொழுது, அங்கே அபரிதமான ஆற்றல் பிறக்கின்றது.

4. ஆனால், சாதாரண மக்கள் இந்த உண்மையை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. ஆகையால் அவர்களிடையே அவநம்பிக்கை அதிகமாக இருக்கின்றது. அவர்களில் பலர் தன்னம்பிக்கையை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

5. வேறு சிலர், செய்வினை என்ற ஒன்றைச் சொல்லி மிகவும் கலக்கம் அடைகின்றார்கள்.

6. செய்வினை என்றால் என்ன? முற்பகலில் செய்த வினையின் விளைவு பிற்பகலில் நம்மை அண்டுவதே செய்வினையாகும்.

7. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் சீராய் இருக்கும் மனிதன் உயர் தர்ம நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்கின்றான். அத்தகைய மனிதனை தீய சக்திகள் அண்டுவதில்லை.

## சத்திய யுக சிந்தனைகள்
## அத்தியாயம் 10

*(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி 1992)*

1. பரீட்சையில் தேர்ச்சி அடைவதைக் குறித்து பள்ளி மாணவன் பயப்படுகிறான்.

2. திருமணமான பெண்ணோ, தனது கணவனை மாமியாரும் நாத்தனாரும் எங்கே அடிமைப்படுத்தி விடுவார்களோ என்று பயப்படுகிறாள்.

3. கர்ப்பிணிப் பெண்ணையும் அச்சம் கவ்விக் கொள்கிறது. எவ்விதப் பிரச்சனையுமின்றி அழகான, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுப்பதைக் குறித்து அவள் பயப்படுகிறாள்.

4. புதிதாக தொழில் ஒன்றை ஆரம்பிக்கும் வியாபாரியின் மனத்திலும் பயம் தாண்டவமாடுகிறது.

5. மரண பயமும் பலரை வாட்டுகின்றது. "இரவில் உறங்கி, காலையில் விழிப்போமா?" என்ற கேள்வி அவர்களை அச்சுறுத்துகிறது.

6. இத்தகைய பயங்களையெல்லாம் அகற்றக் கூடிய உபாயம் ஒன்றுண்டு. அதுதான், அபயம் அளிக்கக் கூடிய ஆலயங்களுக்குச் சென்று, மனமுருகி இறைவனை வழிபடுதல் ஆகும்.

7. எனவே, அகத்திலும் புறத்திலும் இறைவனை வழிபட்டு தன்னம்பிக்கை மிக்க செயல் வீரர்களாக வாழுங்கள். ஆனால் வெறும் பூஜா புனஸ்காரங்களோடு மாத்திரம் நின்று விடாதீர்கள்.

8. மக்களுக்கு நல்ல எண்ணங்களையும் நல்ல உணர்வுகளையும் கொடுக்கக் கூடிய புனித ஸ்தலங்களாக இந்த ஆலயங்களை மாற்றி அமையுங்கள்.

# சத்திய யுக சிந்தனைகள்

# அத்தியாயம் 11

(மகரிஷி மேற்கொண்ட ஏழு நாள் தவ வேள்வி நிறைவு நாளன்று அவர்கள் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. தமிழ் நாடு, 1992.)

1. நீங்கள் அந்த இறையுணர்வை புருவ மத்தியில் வைத்துக் கொண்டே உங்களுடைய கடமைகளைச் செய்யுங்கள். அப்பொழுது தீமைகள் தானாக விலகி நன்மைகள் உங்களை வந்தடையும்.

2. நடந்ததெல்லாம் நன்மைக்காகவே நடந்திருக்கிறது என உறுதியாக நம்பி, அதற்குத் தக்கவாறு செயல்படுங்கள். அப்படிச் செய்வதால் நடக்கப் போவதெல்லாம் நன்மையாகவே முடியும்.

3. நடந்து முடிந்து போன நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாளும் அசை போட்டுக் கொண்டிருப்பதால் உங்களுக்கென்ன இலாபம்? உடல் நலக்குறைவும் மனச் சோர்வும்தானே மிச்சம்.

4. மனச் சோர்வோடு இருக்கும் பொழுது உங்களுடைய கடமைகளை உற்சாகத்தோடும் அறிவுத் திறனோடும் செய்ய முடியாது.

5. வருந்துவதால் வல்லமை குறையும் என்பதை மறந்து விடாதீர்கள்.

6. நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் நன்மை இருக்கிறதென்பதைப் பற்றி சற்று சிந்திக்கும் போது, "இந்த நன்மைக்காகத்தான் இச்சம்பவம் நடந்திருக்கிறது" என நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

7. தீமையிலும் நன்மை இருக்கிறது. தீமையிலுள்ள நன்மையை மட்டும் நாம் எடுத்துக் கொண்டோமேயானால் அடுத்த நன்மை நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

8. ஆகவேதான், மற்றவர்களிடம் இருக்கக் கூடிய குறைகளை நாம் மறந்துவிட்டு அவர்களின் நிறைகளை மாத்திரமே காண வேண்டும்.

9. குறைகளையே காணும் பொழுது நம் மனத்திலும் குறைவு ஏற்படுகின்றது. எப்பொழுது மற்றவர்களின் நிறைகளைக் காண்கின்றோமோ அப்பொழுது நம் மனமும் நிறைவு பெறுகின்றது.

# சத்திய யுக சிந்தனைகள்

## அத்தியாயம் 12

(ஏழுநாள் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. தமிழ் நாடு, 1992.)

1. உலக மக்கள் அனைவருக்கும் தேவையான பொருள்கள் இந்த உலகத்தில் இருக்கின்றன.

2. இருந்த போதிலும், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, தங்குவதற்கு சரியான இருப்பிடமுமின்றி உலகத்தின் பல பகுதிகளில் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

3. பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் இன்புற்று வாழ்வதற்கே பிறக்கின்றான் என்பது உண்மையென்றாலும், கோடானுகோடி மக்கள் அல்லல்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

4. ஒரு மனிதனிடம் பொருள் ஏராளமாக இருக்கிறது. வேறொரு மனிதனிடமோ பொருள் அறவே இல்லை, அல்லது மிகக் குறைவாகவே இருக்கிறது.

5. ஒரு நாட்டில் உணவை குப்பைத் தொட்டியில் கொட்டுகிறார்கள். வேறொரு நாட்டில், குப்பைத் தொட்டியிலிருக்கும் உணவை உண்டு சிலர் உயிர் வாழ்கிறார்கள்.

6. சில இடங்களில் விளைச்சல் மிகுதியால் தானியங்களும், பழவகைகளும், காய்கறிகளும் அழிக்கப்படுகின்றன. விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்காகவே இப்படி செய்யப்படுகிறது என்ற விளக்கமும் கொடுக்கிறார்கள்.

7. இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகள் உலக மக்களிடையே குரோத மனப்பான்மையையும் பொறாமையையும் வளர்க்கின்றன. இதனால்தான் போராட்டங்கள், சண்டைச் சச்சரவுகள், குழப்பங்கள் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

8. இப்பிரச்சனைகளிலிருந்து மக்கள் விடுபட வேண்டுமானால், ஆட்சியிலிருப்பவர்கள் மக்களின் நலனைக் கருதி, மக்களுக்குத் தேவையான நிர்வாக சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும்.

9. நிர்வாகத்தை சீர்படுத்துவதற்குத் தேவையான துணிவையும், மனித நேயத்தையும், உந்துதலையும் இந்தக் குண்டலினி சக்தியின் மூலமாக உலக ஆட்சியாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

10. அதனால்தான், மக்கள் சுபிட்சம் பெற வேண்டுமென்றால் மக்களை வழி நடத்திச் செல்லும் ஆட்சியாளர்கள் அனைவரும் ஆன்மிக உணர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வருகிறோம்.

11. குண்டலினி தீக்ஷையின் மூலமாக கிடைக்கும் இந்த மெய்யுணர்வை ஒரு குடும்பத்தலைவன் பெற்றுக் கொள்ளும்போது அந்தக் குடும்பம் நல்ல ஒழுக்கத்தோடும், சீர்திருத்தத்தோடும், சிக்கனத்தோடும், மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்கின்றது.

12. ஒரு படைத்தலைவனுக்கு இவ்வுணர்வு கிடைத்துவிட்டால் போதும், அது வேகமாக படை முழுவதும் பரவி விடுகிறது.

**13.** அதுபோன்றே, ஓர் அரசனுக்கு[4] இந்த மெய்யுணர்வு கிடைத்தால், அது அவன் மூலமாக நாடு முழுவதும் சீக்கிரத்தில் பரவி, மனித சமுதாயம் சிறப்பாக வாழ வழி பிறக்கிறது.

**14.** ஆகவேதான், ஞானமும் அரசியலும் ஒன்றுபட்ட அன்றே உலக சமாதானம் ஏற்படும் என்று கூறி வருகிறோம்.

## சத்திய யுக சிந்தனைகள்

## அத்தியாயம் 13

*(1993-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மகரிஷி பரஞ்சோதி அவர்கள் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.)*

**1.** கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் காக்கும் முக்கியப் பொறுப்பு பெண்களின் கைகளிளேயே இருக்கிறது.

**2.** குடும்பத்தலைவி சிறப்புடையவளாக இருந்தால், அவள் மூலமாக அந்தக் குடும்பமே சிறப்பு பெறுகின்றது.

**3.** குடும்பங்கள் சிறப்பு பெறப்பெற, இனமும் சமுதாயமும் தானாகவே சிறப்படைகின்றன. சமுதாயங்கள் சிறப்படையும்பொழுது உலகமே உய்வடைகிறது.

**4.** ஆகவேதான், பெண்கள் கலாச்சாரத்திலும், கலைகளிலும், மற்ற எல்லாத் துறைகளிலும் உயர்ந்த நிலைகளை அடையவேண்டும் என்று நாம் அடிக்கடி கூறி வருகின்றோம்.


---

[4] "அரசன்" என்ற சொல், மந்திரிகள், ஆளுநர்கள், ஜனாதிபதிகள், மன்னர்கள் ஆகியோரை குறிக்கும் சொல்லாக இங்கே பொருள்படுகிறது.











கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் காக்கும் முக்கியப் பொறுப்பு பெண்களின் கைகளிலேயே இருக்கிறது. ஆகவேதான், பெண்கள் கலாச்சாரத்திலும், கலைகளிலும், மற்ற எல்லாத் துறைகளிலும் உயர்ந்த நிலைகளை அடைய வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

***சத்திய யுக சிந்தனைகள் 13 :1, 4***

5. மக்கள் நலனில் அக்கறையுள்ள பண்பட்ட சமுதாயத்தை ஏற்படுத்திடுவோம். பண்பட்ட உலகை நாம் சிருஷ்டிப்போம்.

6. பண்பட்ட சமுதாயம் பெண்களை அடிமைகளாகப் பாவிக்காது. மாறாக, அது அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும்.

7. பண்பட்ட சமுதாயத்தில் பெண்களின் நலன், தாய்-சேய் நலன் போன்றவை நன்கு காக்கப்பட்டு, பெண்களின் விசேஷ திறமைகள் நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும்.

8. பண்பட்ட சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் சரி சமமாக மதிக்கப்படுவர். விதவைப் பெண்ணும் மதிக்கப்படுவாள்.

9. ஆனால், சில சமுதாயங்களில் விதவைகள் மதிக்கப்படுவதில்லை. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும்பொழுது, கணவனை இழந்த பெண் அத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது என்று சில சமுதாயங்கள் அவளை ஒதுக்கி வைக்கின்றன.

10. அந்த விதவை, தனது குழந்தைகளைப் படிக்கவைத்து, வளர்த்து, ஆளாக்கி, அவர்களுக்குத் திருமணம் முடித்து வைப்பதற்குள் எத்தனை இன்னல்களையும் கஷ்டங்களையும் அனுபவித்திருப்பாள் என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

11. தனது குழந்தைகளின் நலனுக்காகவே தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்ட இத்தகைய விதவைத் தாயைப் பார்த்து: "உன் குழந்தைகளின் திருமணத்தன்று நீ மேடையில் நின்று அவர்களை ஆசீர்வதிக்கக்கூடாது" என்றல்லவா சமுதாயம் உரத்தக் குரலில் கூறுகிறது.

**12.** இந்த அவல நிலை மாற்றப்பட வேண்டும். இப்படிச் சொல்லும் சமுதாயத்தை நாம் திருத்தியே ஆகவேண்டும்.

**13.** கணவனை இழந்த பெண்ணும் பண்பில் உயர்ந்தவளாகவே இருக்கிறாள். அவளை நாம் வாழ்த்திடுவோம்.

**14.** அதனால்தான், நமது உலக சமாதான ஆலயத்தில் நடைபெறும் பல சுப காரியங்களை விதவைப் பெண்மணிகளை முன்வைத்து நடத்தி வருகின்றோம். ▢



# திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார்

அருளிய

# உயர் ஞான தீபம்

*(<u>தொகுப்பாசிரியரின் குறிப்பு:</u> பிரபஞ்சத்தை இயக்கும் இறைவன் நம் ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கிறான். அத்தகைய இறைவனை அகத்திலேயே கண்டுணரலாம் என்பதை இப்பகுதி விளக்குகிறது.)*

## அத்தியாயம் 1

(மகரிஷி எழுதிய "உன் துன்பத்திற்கு ஒரு விடி வெள்ளி!" எனும் தலையங்கத்திலிருந்து எடுத்து தொகுக்கப்பட்டது. மார்ச் 1991).

**1.** ஓர் ஆன்மா மற்றோர் ஆன்மாவிடமிருந்தே தூண்டுதலைப் பெற முடியும்.

**2.** வாழ்க்கை முழுவதும் நாம் பல நூல்களைக் கற்று புலமையும் அறிவு நுட்பமும் பெற்றிருக்கலாம். ஆனால் அத்தகைய கல்வியும் அறிவும் நமது ஆன்மிகத்தை வளரச் செய்யவில்லை என்பதை அனுபவப் பூர்வமாக இறுதியில் உணர்ந்து தெளிவு பெறுகிறோம்.

**3.** புத்தகங்களைப் படிப்பதால் கிடைக்கும் நன்மைகளை நாம் பகுத்து ஆராயும் பொழுது, ஆன்மிக உணர்வுகளை விரைவில் வளர்ச்சி பெறச்செய்ய புத்தகங்கள் போதுமானவை அல்ல என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

4. அதனால்தான், ஆன்மிகத்தைப் பற்றி வியத்தகு சொற்பொழிவு ஆற்றினாலும், ஆன்மிக வாழ்க்கை வாழ முற்படும் பொழுதுதான் நாம் ஆன்மிகத்தில் குறைவு உடையவர்களாகவே இருக்கிறோம் என்பதை உணருகிறோம்.

5. ஆன்மிகத்தை விரைவு படுத்துவதற்குத் தேவையான தூண்டுதல் மற்றோர் ஆன்மாவிடமிருந்தே வருகிறது.

6. தூண்டுதல் அளிக்கும் ஆன்மாதான் குரு. குருவால் தூண்டப்படுகிற ஆன்மாவுடையவர்தான் சீடர்.


7. அவ்வப்போது அவதரிக்கும் ஒளிபெற்ற ஆன்மாக்கள் தெய்வீகத் தன்மையை உலகிற்கு வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் ஏற்கனவே ஆத்ம விடுதலை பெற்றவர்கள்.

8. இத்தகையோர் முக்திக்குப் பாடுபட வேண்டிய அவசியமில்லை. மற்றவர்களுக்கு உதவுவதற்காகவே இவர்கள் இவ்வுலகில் அவதரிக்கின்றனர்.

9. மனிதர்களின் ஆன்மிக வளர்ச்சி இத்தகைய விடுதலை பெற்ற ஆன்மாக்களைப் பொறுத்தே அமைகிறது. இவர்கள், முதலில் ஏற்றிய விளக்கைப் போன்றவர்கள்.

10. இந்த முதல் விளக்கிலிருந்தே இதர விளக்குகள் பற்ற வைக்கப் படுகின்றன.

11. ஒவ்வொருவரிடமும் ஒளி இருக்கிறது. இருப்பினும், பெரும்பான்மை மக்களிடம் அந்த ஒளி மூடி வைக்கப்பட்டிருக்கிறது.



**பல்லாயிரக்கணக்கான விளக்குகள் ஏற்றப்படுகின்றன. முதல் விளக்கு குரு. அதிலிருந்து பற்ற வைக்கப்பட்ட மற்ற விளக்குகள்தான் சீடர்கள் ஆவர்.**

**உயர் ஞான தீபம் 1:14**

12. சிறந்த ஆன்மாக்கள் இளம் பருவத்திலிருந்தே ஒளிரும் விளக்குகள். இவர்களுடன் தொடர்பு கொள்ளும் மற்ற ஆன்மாக்களின் விளக்குகளும் வெளியில் ஒளி தெரியும்படி மிளிர்கின்றன.

13. இதனால் முதல் விளக்கு தன் ஒளியில் சிறிதும் குறைந்து விடுவதில்லை. மாறாக, அது தன் ஒளியினால் மற்ற விளக்குகளையும் பிரகாசிக்கச் செய்கிறது.

14. பல்லாயிரக்கணக்கான விளக்குகள் ஏற்றப்படுகின்றன. முதல் விளக்கு குரு. அதிலிருந்து பற்றவைக்கப்பட்ட மற்ற விளக்குகள்தான் சீடர்கள் ஆவர்.

## உயர் ஞான தீபம்

## அத்தியாயம் 2

(முதல் வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு, ஜனவரி 7, 1992)

1. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற அந்தப் பரம் பொருள், தனது ஆற்றலை எல்லோருக்கும் வாரி வாரி வழங்க ஆயத்தமாய் இருக்கிறது.

2. யார் யார் உண்மையை விரும்பி தன்னைத் தேடி வருகின்றார்களோ அவர்களுக்கு அது அருள் பாலிக்கின்றது.

3. ஆனால் புறப் பொருள்களிலேயே மனிதனின் மனம் சென்று கொண்டிருப்பதால் இறைவனை வணங்கக்கூடிய மனோபாவம் மனிதனிடத்தில் இல்லை.

4. உருக்கத்தோடு இரு கண்களிலும் நீர் மல்க இறைவனை வணங்கினால் அவனருள் நிச்சயம் உங்களுக்குக் கிட்டும்.

5. ஆனந்தத்தை மனிதன் புறத்திலேயே தேடிக்கொண்டு இருக்கிறான். ஆனால் அவன் தேடும் சந்தோஷம் புறத்தில் இல்லை, அது அவனது அகத்திலேயே இருக்கிறது.

6. இறைவனை அடைவதற்கு, அவனுடைய அருளைப் பெறுவதற்கு நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். உடலிலுள்ள தமோ குணத்தை நீக்கி அவனருளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

7. அவன் அருளின்றி அவனைப் பார்க்க முடியாது.

## உயர் ஞான தீபம்
## அத்தியாயம் 3

1. சும்மா இருப்பதே சுகம் என்று யோகியர் கூறுவர்.

2. சும்மா இருப்பது என்றால் என்ன? நம் காதுகளை பஞ்சை வைத்து அடைத்து விட்டு, நமது கைகளையும் கால்களையும் கட்டச்சொல்லி விட்டு, வாய் பேசாது அப்படியே அமர்ந்திருந்தால் போதுமா?

3. சிந்தித்துப் பாருங்கள். காற்றைவிட வேகமாகச் செல்லக் கூடிய ஒன்று உங்களிடம் இருக்கிறது. அதுதான் உங்கள் மனம்.

4. நீங்கள் இங்கு இருந்து கொண்டே உலகின் பல பகுதிகளுக்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மனமே உங்களை அங்கெல்லாம் அழைத்துச் செல்கிறது.

5. வேகமாகச் செல்லும் உங்கள் மனத்தை உட்புறமாகத் திருப்பக் கற்றுக் கொள்ளுங்கள். சும்மா இருக்கும் சுகத்தைப் பெறுவீர்கள்.

6. அது அப்படியிருக்கும், இப்படியிருக்கும் என்று உவமானத்துடன் தான் வருணிக்க முடியுமே தவிர, சும்மா இருக்கும் சுகத்தை சொல்லால் விவரிக்க இயலாது.

7. சும்மா இருக்கும் சுகமே பேரானந்தம், அதுவே பேரமைதி.

## உயர் ஞான தீபம்
## அத்தியாயம் 4

1. "புருஷன்" என்ற சொல் மனித உடலைக் குறிப்பது அல்ல. இந்தப் பருவுடலை, நுண்ணுடலை, அறிவுடலை இயக்கக் கூடிய பரம் பொருளைத்தான் புருஷன் என அழைக்கிறோம்.

2. இப்புருஷன் தோன்றும் பொழுது ஆத்ம சொரூபமான புருஷனாக இருக்கிறான்.

3. ஆனால் பிரகிருதி என்ற உலக இயற்கையோடு அந்தப் புருஷன் இணையும்போது அவனுக்கு துக்கம் ஏற்படுகிறது.

4. அதைத்தான் சம்சாரம் என்றும், சம்சார பந்தத்தில் ஈடுபட்டு அல்லல் படுதல் என்றும் கூறுகிறோம்.

5. அந்தப் பரம்பொருள், "உடல்" என்ற தத்துவத்தோடு இணையும் பொழுது இந்த ஜீவனைப் பற்றுவதாக அது எண்ணம் கொண்டு விடுகிறது.

6. "இந்தப் பருவுடல்தான் நாம், புத்திதான் நாம்" என்று மக்கள் நினைப்பதால்தான் அவர்கள் சம்சார பந்தத்தில் ஈடுபட்டு துக்கப் படுகிறார்கள்.

7. சம்சாரம் என்பது மனைவியினால் வரும் துக்கமல்ல.

## உயர் ஞான தீபம்
## அத்தியாயம் 5

1. தொலை தூரத்தில் உள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு தொலை நோக்கியை உபயோகிக்கிறோம். அது மனிதனால் சிருஷ்டிக்கப் பட்ட ஒரு கண்.

2. அதைப் போல, கடந்து கடந்து இருக்கக் கூடிய கடவுள் நிலையைக் காண்பதற்கு இயற்கை மனிதனுக்கு மிகப் பெரிய கண்ணைக் கொடுத்திருக்கிறது.

3. அந்தக் கண்தான் நெற்றிக் கண், ஞானக் கண், மூன்றாவது கண் என அழைக்கப்படுகின்றது.

4. நெற்றிக் கண்ணின் வழியாக ஒரு மனிதன் தன்னையும் இந்த உலகத்தையும் கடந்து கடந்து செல்ல முடியும்.

5. இரு கண்களுக்கும் புலனாகாத நல்லெண்ண அலைகளை மனிதன் இந்த மூன்றாவது கண்ணினால் கிரகிக்க முடியும்.

6. அதனால்தான் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனைப் பார்த்து: "அர்ஜுனா, உனது ஊனக் கண்களால் எனது விஸ்வரூபத்தை காண இயலாது. ஏனென்றால் ஆயிரம் கோடி சூரியனின் பிரகாசம் உடையவன் நான். எனவே, நான் உனக்கு மூன்றாவது கண்ணாகிய ஞானக் கண்ணைத் தருகிறேன். அந்த ஞானக் கண்ணால் நீ என்னைப் பார்." என்று கூறுகின்றார்.

## உயர் ஞான தீபம்
## அத்தியாயம் 6

(பெப்ருவரி 1992ல் கோலாலம்பூரில் ஆற்றிய அருளுரையிலிருந்தும், 25-09-1992 வெள்ளிக் கிழமையன்று சேலத்தில் ஆற்றிய அருளுரையிலிருந்தும் தொகுக்கப்பட்டது)

1. சூரியனும் சந்திரனும் தோன்றுவதற்கு முன்பு பிரபஞ்சம் முழுவதும் இருளாகவே இருந்தது.

**2.** அந்த இருளில் இருந்து கொண்டே பிரபஞ்சத்தை இயக்கிய இறை ஆற்றலை நம் முன்னோர்கள், நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் என அழைத்தனர்.

**3.** அந்த இறை ஆற்றலைத்தான், அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இறைவன் என்று நாமும் அழைக்கின்றோம். ஆனால் அந்த இறைவன் நம் ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கின்றான்.

**4.** இத்தத்துவத்தை மாணிக்கவாசகர் இப்படிப் பாடுகின்றார்:

நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே,
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே.

**5.** எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற அந்த இறைவன் நம் அகத்திலும் நிறைந்திருக்கின்றான். அவன் நம் அனைவருக்கும் ஒரு மாபெரும் ஆற்றலை அளிக்கின்றான்.

**6.** இதை நாம் உணர்ந்தோமேயானால், அதுவே நமக்குள் ஆக்க சக்தியாக மாறுகின்றது.

## உயர் ஞான தீபம்
## அத்தியாயம் 7

(முதலாவது மகா தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு, ஜனுவரி 7, 1992)

**1.** பெய்கின்ற மழை நீரில் எவ்வித அழுக்கும் இல்லை.

**2.** **பெய்யும் இடத்திற்கு ஏற்ப, அந்த மழை நீரின் மணம், குணம், நிறம் மாறுகின்றது.**

**3.** **அந்த மழை நீரைப் போன்றே நீங்களும் பரிசுத்தவான்களாகவே பிறந்திருக்கின்றீர்கள்.**

**4.** **ஆனால், பல்வேறு குண அழுக்குகளால் சூழப்பட்ட நீங்களோ உங்கள் பரிசுத்தத் தன்மையை இழந்து இப்பொழுது அல்லல் படுகின்றீர்கள்.**

**5.** **உங்களுடைய குண அழுக்குகளையெல்லாம் சுட்டெரிப்பதற்காகவே உங்களிடம் ஒரு சூரியன் உள்ளது. அந்தச் சூரியன்தான் சூரிய காயத்ரீ என அழைக்கப்படும் பிரம்ம மந்திரம்.**

**6.** **"ஓம் பூர்புவஸ்ஸுவ:**
**ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி |**
**தியோ யோ ந: ப்ரசோதயாத் || "**

**7.** **பூ: புவ: ஸுவ: என்ற பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கலோகம் ஆகிய மூன்றையும் கடந்து நிற்பது எதுவோ அதுவே கடவுளாகும்.**

**8.** **பருவுடல், நுண்ணுடல், அறிவுடல் ஆகிய மூன்றையும் எது கடந்து நிற்கின்றதோ, அதுவே சுடர்க் கடவுளாகும்.**

**9.** **நம் அறிவைத் தூண்டும் அத்தகைய சுடர்க் கடவுளின் மேலான ஒளியை நாம் தியானிப்போமாக என்று சூரிய காயத்ரீ நமக்கு அறிவுரை கூறுகின்றது.**

# உயர் ஞான தீபம்

## அத்தியாயம் 8

(25-09-1992 வெள்ளிக்கிழமையன்று சேலத்தில் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது)

**1.** ஆதியில் இப்பிரபஞ்சம் முழுவதும் இருளாகவே[5] இருந்தது. இருளிலிருந்த ஆதி என்ற பரபிரம்மம், "நான்" என்ற துணிவைப் பெற்றவுடன் அதற்கு நினைவு ஏற்பட்டது.

**2.** நினைவு ஏற்பட்டவுடன், இப்பரபிரம்மம் ஓம்கார நாதமாக வடிவெடுத்தது.

**3.** அதன் பிறகு, அது ஓம்கார ஒளியாகி, உலகத்திற்கு உயிராக இருக்கக் கூடிய, என்றென்றைக்கும் உருப்பெருக்கம் குறைந்திடாத சூரியனாக பரிணமித்தது.

**4.** ஆகவேதான் எல்லா சமயங்களும், "இறைவன் ஒளி வடிவானவன்" எனக் கூறுகின்றன. இன்றும்கூட நாம் காலையில் துயில் எழுந்தவுடன் ஒளி தரும் சூரியனை வழிபடுகின்றோம். இரவில் விளக்கேற்றி வைத்து அந்த விளக்கை வணங்குகின்றோம்.

**5.** என்றென்றைக்கும் உருப்பெருக்கம் குறைந்திடாத சூரியனிலிருந்து தோன்றிய நெருப்புத் துகள்கள்தான் இவ்விண்ணில் அணுக்களாகின.

---

[5] "ஏக்கத்திற்கு இடமாயுள்ளதும், படைக்கப்படாததும், படைக்க சக்தியற்றதும், ஒரு பொருளாக இல்லாததும், எல்லா உருவத்திலும் உள்ளும் புறமும் விலக்கப்பட முடியாது நிறைந்து உள்ளதும் இருள் அல்லது சூன்யமே." - **ஞான வள்ளல் பரஞ்சோதி மகான்.**

6. எங்கும் நிறைந்த இருட்டில் இவ்வணுக்கள் வேகமாகப் பரவின. வேகம் குறைந்ததும், இவை தம் இயல்பால் ஒன்று சேர ஆரம்பித்தன.

7. இச்சேர்க்கையால் சுழலுதல், விலகுதல், உருளுதல், புரளுதல், இழுத்தல் போன்ற ஈர்க்கும் அலைகளாக மாறி, அதன்பின் அவைகளே விண்மீன்களாக, கோள்களாக, சந்திரனாக, நாம் வாழும் பூமியாக மாறின.

8. சூரியனிலிருந்து பிரிந்த அணுக்கள், வெப்பம் குறையக் குறைய நீராக மாறின. பின்பு உறைதலால் அவை நிலமாக மாறின.

9. இந்தத் தத்துவத்தைத்தான் ஞான வள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்:

**அணுக்களின் வேகக் குறைவே கனல்,**
**அணுக்களின் சேர்க்கையே நீர்,**
**அணுக்களின் உறைதலே நிலம்.**
**அணுக்களின் அலைகளே காற்று,**
**அணுக்களின் வெப்பமே அக்கினி.**

10. அணுக்களின்றி பஞ்ச பூதங்கள் இல்லை.

11. பஞ்ச பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் முதலில் நீரில் வாழும் உயிர்கள் உண்டாகின. அதன் பிறகு தாவர வகைகள், ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற ஜீவ ராசிகள் உண்டாகின.

# உயர் ஞான தீபம்

## அத்தியாயம் 9

(முதல் வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு. ஜனுவரி 7, 1992)

**1.** மனிதா! உன்னிடத்தில் மிகப் பெரிய பொக்கிஷம் இருக்கின்றது.

**2.** இப்பிரபஞ்சம் முழுவதும் எது நீக்கமற நிறைந்து இருக்கின்றதோ, அதுவே உன்னிடத்தில் இருக்கின்றது.

**3.** சூரியனை ஒளி பெறச் செய்யும் சக்தி எதுவோ, அதுவே உன்னிடத்தில் இருக்கின்றது.

**4.** இப்பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றல் எதுவோ, அதுவே உன்னிடத்தில் இருக்கின்றது.

**5.** அது, உன் இரு கண்களுக்குமிடையில், உன் புருவ மத்தியில் இருக்கின்றது. புருவ மத்திதான் ஆத்ம சக்தியின் இருப்பிடம், இந்த புருவ மத்தியில்தான் இறைவன் உணர்வாக அமர்ந்திருக்கின்றான்.

**6.** தன்னைப் போலவே மனிதனை இறைவன் படைத்தானென்றும், படைத்த மனித உயிர்களை இயக்குவதற்கு உடலினுள் கருவிகளை இறைவன் அமைத்தான் என்றும் உபநிஷதங்கள் கூறுகின்றன.

**7.** கருவிகள் செம்மையாக இயங்குவதை உறுதி செய்ய அந்த இறைவனே மனித கபாலத்தின் வழியாக உடலினுள் புகுந்தான் என்றும் உபநிஷதங்கள் மேலும் இயம்புகின்றன.





மனிதா! உன்னிடத்தில் மிகப்பெரிய பொக்கிஷம் இருக்கின்றது. இப்பிரபஞ்சம் முழுவதும் எது நீக்கமற நிறைந்திருக்கின்றதோ, அதுவே உன்னிடத்தில் இருக்கின்றது. சூரியனை ஒளி பெறச் செய்யும் சக்தி எதுவோ, அதுவே உன்னிடத்தில் இருக்கின்றது. இப்பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றல் எதுவோ, அதுவே உன்னிடத்தில் இருக்கின்றது. அது, உன் இரு கண்களுக்கும் இடையில், உன் புருவ மத்தியில் இருக்கின்றது. புருவ மத்திதான் ஆத்ம சக்தியின் இருப்பிடம்.

**உயர் ஞான *தீபம்* 9 : 1-5**

# உயர் ஞான தீபம்

## அத்தியாயம் 10

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி 1992).

1. மனிதனுக்கு இரண்டு விதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. முதற் சிக்கல் மலச்சிக்கல், இரண்டாவது சிக்கல் மனச்சிக்கல்.

2. மலச்சிக்கலை எளிதில் போக்கி விடலாம். ஆனால் மனச்சிக்கலைப் போக்குவதோ சிரமமான காரியம்.

3. மனத்தில் நெடுங்காலமாகக் குடிகொண்டிருக்கும் மாசுகளையும் பிரச்சனைகளையும் இறைவழிபாட்டின் மூலமே வெளியேற்ற முடியும்.

4. மனம் எப்பொழுது தூய்மை பெறுகின்றதோ, அப்பொழுதுதான் இறைவன் அந்த மனத்தினுள் குடி கொள்கிறான்.

5. அனுதினமும் உணவை உட்கொண்டு உடலின் தேவைகளை நாம் பூர்த்தி செய்து கொள்கிறோம்.

6. அதைப் போன்று, ஆன்ம நிறைவைப் பெறுவதற்கும் இறைவனை நாம் அனுதினமும் வழிபட வேண்டும்.

# உயர் ஞான தீபம்

## அத்தியாயம் 11

(மகரிஷி பரஞ்சோதியார் அவர்கள் 9-2-1992 அன்று கோலாலம்பூரில் தமிழ் நேசன் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதியிலிருந்து தொகுக்கப் பட்டது).

**1.** தென்னிந்திய மண்ணில் தோன்றிய மகான்களும் சித்தர் பெருமக்களும் இறைவனை அகத்தில் தேடினார்கள்.

**2.** தேடிய இறைவனை அகத்திலேயே அவர்கள் கண்டார்கள். தேடிய அமைதியையும் அகத்திலேயே கண்டுணர்ந்தார்கள்.

**3.** ஆனால் விஞ்ஞானத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேறிய மேலை நாட்டினரோ இன்னமும் புறத்திலேயே அமைதியைத் தேடி அலைகின்றனர்.

**4.** புறத்தில் அமைதி இல்லை என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்து கொண்டபிறகு, அகத்தில் மன அமைதியை எப்படித் தேடுவது என்பதைக் கண்டறிய புண்ணிய பூமியாகிய இந்திய நாட்டை நாடி அவர்கள் வருகின்றார்கள்.

**5.** மன அமைதிக்கு ஆதாரமாக இருப்பவை நற்சிந்தனையும் மனிதனின் உண்மை நிலையை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆத்ம தாகமுமேயாகும்.

**6.** நற்சிந்தனை எப்பொழுது தோன்றுகிறதோ அப்பொழுதே ஞானமும் உதயமாகின்றது.

7. *"இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும் பிறர் தர வருவதில்லை. இவற்றை நாமேதான் ஏற்படுத்திக் கொள்கிறோம்"* என்று ஞானம் நமக்கு அறிவுறுத்துகிறது.

8. ஞானத்திற்கும் இறையுணர்வுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இறையுணர்வினால் மட்டுமே மக்களை ஒன்றுபடுத்த முடியும்.



# திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார்

அருளிய

# ஆன்மாவின் அறைகூவல்

(தொகுப்பாசிரியரின் குறிப்பு: ஞானதீபத்தை குருவின் மூலம் ஏற்றிவைத்துக் கொண்டால் வாழ்க்கையின் துன்பங்களிலிருந்து விடுதலை பெறலாம் என்பதை இப்பகுதி விளக்குகிறது.)

## அத்தியாயம் 1

(மகரிஷி எழுதிய "ஆன்மாவின் அறைகூவல்" என்னும் தலையங்கத்திலிருந்து தொகுக்கப்பட்டது. பிப்ரவரி 1991).

1. மனமே! என்னைத் தேடி நீ வெளியில் அலையாதே. நான் எங்கும் நிறைந்துள்ளவன்; எதிலும் நிறைந்துள்ளவன்; எப்போதும் உள்ளவன்.

2. இப்படிப்பட்ட என்னை உன் நலம் கருதி உன் உடலிலும் வியாபிக்கச் செய்துள்ளேன். எதிலும் நிறைந்திருப்பதால் உன் அகத்திலும் நிறைந்துள்ளேன்.

3. நான் என்றும் உள்ளவன். நான் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை.

4. எங்கும் எதிலும் நிறைந்த என்னை உருவமாக வழிபட்டாலும் மந்திரமாக ஜெபித்தாலும் அவர்கள் மனம்போல் நான் மாறுகிறேன்.

5. உலக உயிர்கள் யாவிலும் நான் வியாபித்திருக்கிறேன். உயிர்களில் மெய்யுணர்வாய் உள்ளேன்.

6. எல்லா உயிர்களிலும் நான் இருப்பதை நீ உணரும்போது சகல வேற்றுமைகளும் மறைந்து போகும். பகையும் குழப்பமும் வஞ்சகமும் அங்கிருக்காது.

7. மனமே! நீ என்னிடத்தில் வராதவரை உனக்குத் துன்பம்தான்.

8. நீ என்னை உன் அகத்தில் உணர்வதுதான் உன் துன்பத்திற்கு நிவாரணம்.

9. நானே அன்பின் வடிவம், நானே பேரறிவாளன், நானே பேராற்றலின் பெட்டகம். நானே பேரானந்தம், நானே பேரமைதி.

10. என்னை இந்த உடலிலேயே காணும் மார்க்கமே தியானம். தியான வழிமுறைகளை அறிந்து கொள்ள சத்குருவை நாடு.

11. ஒரு சொல், சிறு சொல், குரு சொல் கேள். என்னை உன் உள்ளத்தில் காண்பாய், நீ பேரமைதி கொள்வாய்!

## ஆன்மாவின் அறைகூவல்

## அத்தியாயம் 2

(ஏழு நாள் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. தமிழ் நாடு, 1992.)

1. இருளில் நடக்க முயற்சிக்கும் பொழுது தட்டுத் தடுமாறி கீழே விழுந்து விடுகின்றோம்.

2. இருள் நீங்கி வெளிச்சம் வந்தவுடன் தங்குத் தடையின்றி எல்லோரும் தைரியமாக நடக்கின்றோம். எவ்வித சிரமமுமின்றி குறித்த பாதையில் செல்கின்றோம்.

3. அதைப் போன்றே மக்களில் பலர் அறியாமை என்னும் இருளில் மூழ்கி வாழ்க்கைப் பாதையில் தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

4. நமது உடலில் தெய்வீக ஆற்றல் பொருந்திய மெய்ஞ்ஞான ஒளி இருக்கின்றது. இந்த ஒளியை ஏற்றி வைத்துக் கொண்டால் நமது வாழ்க்கை தடம் பிறழாது. சந்தோஷமான, சிறப்பான வாழ்க்கை அமையும்.

5. ஆனால் மக்கள் இந்த உண்மையை இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆன்ம விளக்கை ஏற்றிக் கொள்ளாததால் அவர்களால் சமாதானமாக, அமைதியாக, புரிந்துணர்வோடு வாழ முடியவில்லை.

6. சூரியனை மேகம் மறைத்ததைப் போன்று ஆன்ம ஒளியை காம குரோதாதிகள் மறைத்து விட்டன.

7. ஞான தீபத்தை குருவின் மூலம் ஏற்றி வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் துன்பங்களெல்லாம் தானாகவே மறைந்து விடும்.

# ஆன்மாவின் அறைகூவல்

## அத்தியாயம் 3

(ஏழு நாள் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. தமிழ் நாடு, 1992)

**1.** அத்வைதி என்பவன் யார்? இறையுணர்வு ஒன்றையே கருத்திற் கொண்டு, அந்த இறையுணர்வைத் தவிர பிறிதொன்றுமில்லை என்று எவன் நம்புகிறானோ அவனே அத்வைதி.

**2.** அத்வைதிக்கு மறுபிறவி இல்லை.

**3.** நம்பினோர் கெடுவதில்லையென்று நான்மறைகள் சொல்லுகின்றன. அதைத்தான் நாமும் *"உன்னை நம்பு"* என்று சொல்லுகிறோம்.

**4.** மனிதா! பருவுடலையும், நுண்ணுடலையும், அறிவுடலையும் கடந்து நிற்கக் கூடிய, எல்லா ஆற்றல்களையும் கிரகிக்கக்கூடிய, ஆத்மஸ்வரூபமே நீ!

**5.** உடல், மனம், அறிவு ஆகியவற்றைக் கடந்த மனிதனும் நீதான்.

**6.** இறைவனின் ஆற்றலாகவே நீ இருக்கின்றாய் என்பதை உணரும் பொழுது, உன் துன்பங்களையும் மனக் குறைகளையும் உன்னால் போக்கிக்கொள்ள முடியும்.

**7.** உன்னிடம் அன்பு இல்லையா? அறிவு இல்லையா? ஆற்றல் இல்லையா? அல்லது அமைதிதான் இல்லையா?

8. இவையனைத்தும் உன் அகத்திலேயே இருக்கின்றன. ஆனால் மாயையினால் இவைகள் மறைக்கப்பட்டு விட்டதால், புற உலகத்திலல்லவா நீ இவைகளைத் தேடிக்கொண்டிருக்கிறாய்.

9. எதற்காக நீ அன்பு செலுத்துகின்றாய்? எதை அறிந்து கொள்வதற்காக நீ கல்வி கற்கின்றாய்? எந்த ஆற்றலைப் பெற்றுக் கொள்வதற்காக நீ கடினமாக உழைக்கின்றாய்?

10. எந்த ஆனந்தத்தை நீ புற உலகில் நாடுகின்றாய்? என்றோ இழந்த அமைதியை நீ எங்கு தேடுகின்றாய்?

11. இச்செயல்பாடுகள் அனைத்தும் ஆத்மாவை அடைவதற்காகவே அன்றி வேறொன்றிற்காக இல்லையே!



# திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார்

அருளிய

# வழிபாட்டின் உட்பொருள்

(<u>தொகுப்பாசிரியரின் குறிப்பு:</u> பக்தி மார்கத்தில் இருப்பவர்கள் உயர்ந்த ஆன்மிக அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், வழிபாட்டின் உட்பொருளை உணர்ந்து இறைவனை வழிபட வேண்டும் என்பதனை இப்பகுதி வலியுறுத்துகிறது.)

## அத்தியாயம் 1

*(முதல் தவ வேள்வி நிறைவு விழாவிலும், கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்திலும் திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரைகளிலிருந்து தொகுக்கப்பட்டது. ஜனுவரி ~ பெப்ருவரி 1992).*

**1.** "அன்பே சிவம்" என்பது சைவ சித்தாந்தத்தின் கோட்பாடு.

**2.** சிவம் என்பது செம்மைப் பொருள். அங்கிங்கெனாதபடி இப்பிரபஞ்சம் முழுவதும் எது நிறைந்து இருக்கின்றதோ அதுவே சிவம் என அழைக்கப் படுகின்றது.

**3.** அப்படிப்பட்ட சிவமாக நீங்கள் இங்கே அமர்ந்து கொண்டு இருக்கின்றீர்கள்.

**4.** ஆலயத்தில் நுழைந்தவுடன், உங்கள் நெற்றியின் மேற்பகுதியில் திருநீற்றையும் அதற்குக் கீழே குங்குமத்தையும் அணிந்து கொள்கின்றீர்கள்.

5. மேலே இருப்பது சிவனின் இருப்பிடம். கீழே இருப்பது சக்தியின் இருப்பிடம்.

6. கீழே, மூலாதாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் சக்தியை, அந்த உச்சியில் அமர்ந்திருக்கும் இறைவனோடு இணைப்பதைத்தான் நாம் இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதுகின்றோம்.

7. சக்தி என்பதுதான் பிரக்கிருதி. அதனால்தான், "சிவம் இன்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவமில்லை" எனக் கூறுகிறோம்.

8. சிவமும் சக்தியும் சேர்ந்ததுதான் இவ்வுலக கிருத்தியங்கள்.

# வழிபாட்டின் உட்பொருள்
# அத்தியாயம் 2

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி, 1992)

1. மனித குலம் உய்ய வேண்டும் என்ற பெரு நோக்கத்தினாலேயே, "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று நம் முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

2. ஆலயத்திற்குள் நுழைந்தவுடன் உங்கள் மனத்தில் குடி கொண்டிருக்கும் காமம், குரோதம், லோபம், மோஹம், அகங்காரம், மதம், மாச்சர்யம் எனும் மாசுகள் அனைத்தும் தற்காலிகமாக மறைந்து விடுகின்றன.

3. மன மாசுகள் அகற்றப் பட்ட நிலையில் உங்கள் உடலையும் உள்ளத்தையும் பரம்பொருளுக்கு அர்ப்பணம் செய்யும் பொழுது, அந்தப் பரம்பொருளின் தூய நிலைகளை நீங்கள் பெறுகிறீர்கள்.

4. மனத்தூய்மை பெற்ற நீங்கள், மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் வல்ல இறைவனைச் சிந்திக்கச் சிந்திக்க, அந்த இறைவனாகவே நீங்கள் காட்சியளிக்கின்றீர்கள்.

5. அது மட்டுமின்றி, அடுத்த நிலையாகிய, "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என கூறிக் கொள்ளக் கூடிய தூய, உன்னத நிலையையும் நீங்கள் படிப்படியாக அடைகின்றீர்கள்.

6. இந்தத் தூய, உன்னத நிலைக்கு உங்களை அழைத்துச் செல்ல தவம் உதவுகிறது. ஆகையால் அகத்திலிருக்கும் ஆத்ம சொருபனை உணர்ந்து கொள்ள தவறாது தவம் இயற்றுங்கள்.

7. "தவம்" என்றால் "உருக்குதல்" என்று பொருள் படும்.

8. ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, ஏகாக்கிர சித்தத்தோடு தவம் இயற்றும் பொழுது, நாம் வழிபடும் இறைவனே நமக்குள் தோன்றி அனைத்து ஆற்றல்களையும் நமக்கு அருளுகின்றான். இதுதான் தபசின் உயர்ந்த நிலை.

9. இத்தகைய பேராற்றலைப் பெற்ற அன்றைய ரிஷிகள், முனிவர்கள், யோகியர்கள் அனைவரும் தாங்கள் உணர்ந்தவற்றையெல்லாம் ஸ்ருதிகளாக, ஸ்மிருதிகளாகப் படைத்தார்கள்.

10. இவையே நாளடைவில் ஞானாசிரியர்களால் முறையாகத் தொகுக்கப்பட்டு, வேதங்களாக, ஆகமங்களாக, வேதாந்தமென அழைக்கப்படும் உபநிடதங்களாக, உபவேதங்களாக, மக்கள்

மனத்தைக் கவரும் புராணங்களாக, இதிகாசங்களாக உருவெடுத்தன.

11. இங்ஙனம் உருவெடுத்த ரிக், யஜுர், ஸாம, அதர்வண போன்ற வேதங்கள் இந்து சமயத்தின் ஆணி வேராகத் திகழ்கின்றன.[6]

12. பொதுவாகச் சொல்லப் போனால், உயர் நிலைகளை அடைவதற்கு பிரம்மத்தை உணர்ந்த ஞானாசிரியர்கள் ஏற்படுத்திச் சென்ற அற நெறி முறைகளே நாளடைவில் சமயங்களாக மாறின.

13. இறைவனை எப்படி வழிபட வேண்டும், மனமாசுகளை எப்படிக் களைய வேண்டும், உடலை எப்படித் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பனவற்றையெல்லாம் நம் சமயங்கள் விரிவாகக் கூறுகின்றன.

14. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இறைவன் அனைத்து உயிர்களிலும் வியாபித்திருக்கின்றான் என்ற உண்மையையும் சமயம் உணர்த்துகின்றது.

15. தன்னை அறியக்கூடிய ஞானத்தைக் கொடுத்து, தலைவனாகிய இறைவனை அடைவதற்கும் சமயம் வழி காட்டுகின்றது.

16. சமய உணர்வும் கலாச்சாரமும் பண்பாடும் நம்மை நல்லவர்களாக மாற்றுகின்றன. அவை மனித நேயத்தையும் ஆன்ம நேயத்தையும் வளர்க்கின்றன.

[6] இந்த நான்கு வேதங்களிலும் அதிகப் பழைமையான ரிக் வேதம் சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

**17.** சகல பிரச்சனைகளையும் மனித நேயத்தோடும் ஆன்ம நேயத்தோடும் நாம் அணுகும் பொழுது, அங்கே ஒற்றுமை நிலவுகின்றது, மகிழ்ச்சி மலருகின்றது; சத்திய யுகம் அமைய வழி பிறக்கின்றது.

# வழிபாட்டின் உட்பொருள்

## அத்தியாயம் 3

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது, பெப்ருவரி 1992)

**1.** உயர்ந்த, உன்னத நிலைகளை அடைந்த சித்த புருஷர்கள் வாழும் இடங்களிலெல்லாம் அவர்களைச் சுற்றிலும் ஓர் அபரிதமான அருட்சக்தி இருக்கிறது.

**2.** கண்களுக்குப் புலனாகாத இச்சக்தி, சித்தர் பெருமக்களின் இருப்பிடங்களிலிருந்து சதா அருள் மழை பொழிந்து கொண்டே இருக்கிறது.

**3.** அதனால்தான், "குரு பார்த்திடில் கோடி தோஷம் நிவிர்த்தி" என்று கூறினார்கள்.

**4.** சத்குருவின் பார்வை பட்டாலே போதும், உடல் பிணியும், உள்ளத்தின் மாசுகளும், பிறவிப் பிணியும் நீங்குகின்றன.

# வழிபாட்டின் உட்பொருள்

## அத்தியாயம் 4

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி, 1992.)

1. முதுகந்தண்டின் கீழ்ப்புறத்திலிருந்து உச்சந்தலை வரை ஆறு முக்கிய ஆதார நிலைகள் இருக்கின்றன. இவைகளை சக்கரங்கள் என பொதுவாகக் குறிப்பிடுகின்றோம்.

2. மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞா என அழைக்கப்படும் ஆறு சக்கர ஸ்தானங்களிலும் ஆறு விதமான உயிர் நிலைகள் நம் உடலில் இருக்கின்றன.

3. இந்த ஆறு நிலைகளைத்தான் அறுபடை வீடுகள் எனவும் குறிப்பிடுகின்றோம்.

4. உடலினுள் இருக்கக் கூடிய அபரிதமான தெய்வீக ஆற்றலை ஒவ்வொரு படை வீட்டிலும் இரண்டிரண்டு ஆண்டுகள் வழிபட வழிபட, ஆறாவது இடமாகிய ஆக்ஞா ஸ்தானத்தைக் கடந்து மேலே செல்வதற்கு பன்னிரண்டு ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

5. தவ நிலைகளில் இருந்த நம் முன்னோர்களும் பன்னிரண்டு ஆண்டுகள் கடும் பிரம்மச்சரியத்தோடு இறைவனை வழிபட்டு வந்தனர்.

6. எந்தக் கலையிலும் முறைப்படி தேர்ச்சி பெற வேண்டும் என்றால் பன்னிரண்டு ஆண்டுகள் நாம் பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

7. அதனால்தான் மேற்படிப்பைத் தொடருவதற்கு முன்பு கல்விக் கூடங்களில் பன்னிரண்டு ஆண்டுகள் நாம் கல்வி கற்கின்றோம்.

8. பன்னிரண்டாண்டுகள் தவமிருந்து, தம்முள் தாம் கண்ட இறைவனை சாதாரண மக்களும் கண்டு உணர வேண்டும் என்பதற்காகவே அருள் பிரவாகிக்கும் ஆலயங்களை நம் முன்னோர்கள் நிர்மாணித்தனர்.

9. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதற்கென்றே அவர்கள் முறையான இறை வழிபாட்டையும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

10. இதைத் தவிர, தவம் இயற்றுவதற்கென்றே "ஆயிரங்கால் மண்டபம்" என அழைக்கப்படும் மண்டபங்களையும் பெரிய ஆலயங்களோடு அவர்கள் இணைத்துக் கட்டினார்கள்.

11. சத்குருவிடமிருந்து ஞானோபதேசம் பெற்ற யோகசாதகன் ஒருவன் பன்னிரண்டாண்டுகள் பிரம்மச்சரிய நிலையில் தவமியற்றும் பொழுது, அறிவு விளக்கத்தைத் தரும் "மேதா விலாசம்" என்ற சூக்ஷும நாடி திறக்கின்றது.

12. இத்தவ நிலை, அவனை நாளடைவில் மரணமில்லாப் பெரு வாழ்விற்கு அழைத்துச் செல்கின்றது.

13. அதனால்தான், "ம்ருத்யோர்மா அம்ருதம் கமய" என்று வேதம் கூறுகின்றது. இதற்கு, "மரணத்திலிருந்து மரணமற்ற நிலைக்கு எங்களை அழைத்துச் செல்வாயாக" என்று பொருள்.

**14.** மரணம் என்றால் என்ன? யாருக்கு மரணம்? எதற்கு மரணம்? உடலுக்கா, ஆன்மாவிற்கா?

**15.** ஜனனமும் மரணமும் இந்த உடலுக்குத்தானே தவிர ஆத்மனுக்கு அல்ல.

**16.** உடலையும் அறிவையும் மனத்தையும் கடந்து கடந்து சென்று ஆத்ம நிவேதனம் செய்யும் பொழுது, ஆத்மா அழிவற்றது என்பதை தபசிகள் உணர்ந்து கொள்கின்றனர்.

**17.** இந்த ஆத்மன், நுண்ணுடல், பருவுடல், அறிவுடல் என்ற மூன்று உடல்களையும் கடந்தவன்.

**18.** விழிப்பு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கும் ஆத்மனை, காலத்தைக் கடந்த நிர்குணன் என்றும், நாமமற்றவன் என்றும் வேதங்கள் குறிப்பிடுகின்றன.

# வழிபாட்டின் உட்பொருள்
# அத்தியாயம் 5

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி, 1992.)

**1.** ஆறுமுகப் பெருமானுக்கு பல பெயர்கள் உண்டு. அவர் கந்தன், சரவணபவன், குகன், வேலன், கடம்பன், கார்த்திகேயன், குமரன், முருகன், சண்முகநாதன் என பற்பல பெயர்களால் அழைக்கப் படுகிறார்.

2. விநாயகரின் தம்பியாகிய இந்த முருகப்பிரானுக்கு வேறொரு விசேஷமும் உண்டு.

3. அவர் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கவில்லை. மாறாக, முக்கண்ணன் என அழைக்கப் படும் சிவபிரானின் நெற்றிக் கண்ணில் உதித்த தீச்சுடரிலிருந்து தோன்றியவர் என புராணங்கள் கூறுகின்றன.

4. அவர் அருகில் அமர்ந்திருக்கும் வள்ளி, தெய்வானை என்ற இரு மனைவியரும், முருகனின் இச்சா சக்தியையும் கிரியா சக்தியையும் பிரதிபலிக்கின்றனர்.

5. சண்முகநாதனின் கையிலிருக்கும் வேல், ஞான சக்தியைக் குறிப்பிடுகின்றது.

6. எனவேதான், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய மூன்று ஆற்றல்களுக்கும் அதிபதியாக விளங்கும் ஆறுமுகப் பெருமான், தம் பக்தர்களைப் பார்த்து, "யாமிருக்கப் பயமேன்?" எனக் கூறி அபயம் அளிக்கின்றார்.

7. இம்மூன்று சக்திகளின் பிரவாகம் நம் உடலினுள்ளும் அமைந்திருக்கிறது. இடகலை என்ற சந்திர நாடியும், பிங்கலை என்ற சூரிய நாடியும், சுஷும்னா என்ற பிரஹ்ம நாடியும் நம் உடலுக்குத் தேவையான சூக்ஷும பிராணனை எடுத்துச் செல்கின்றன.

8. இம்மூன்று முக்கிய நாடிகளும் இணையும் பொழுது முக்த திரிவேணி சங்கமம் ஏற்படுகின்றது.

9. மூலாதாரத்தில் இணைந்த பிறகு, அவை மீண்டும் இறுதியாக இணையும் இடம்தான் நம் புருவ மத்தி. புருவ மத்தியிலுள்ள உணர்வை உறுதியாகப் பற்றிக் கொண்டவர்களை எந்த வினையும் ஒன்றும் செய்யாது.

# வழிபாட்டின் உட்பொருள்

## அத்தியாயம் 6

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி 1992.)

1. ஆலயத்திற்குச் சென்று தேங்காய் உடைப்பது நமது வழக்கம்.

2. தேங்காயினுள்ளிருக்கக் கூடிய வெண்மையான பருப்பைக் காண வேண்டுமானால், வெவ்வேறு விதமான மூன்று நிலைகளை நாம் கடக்க வேண்டும்.

3. தேங்காயின் மேலிருக்கும் மட்டை ஒரு நிலை. மட்டையை உரிக்கும் பொழுது வரும் நார் வேறொரு நிலை. நாரை உரித்த பிறகு உள்ளே இருக்கும் கடினமான ஓடு மூன்றாம் நிலை.

4. மட்டையையும், நாரையும், கடினமான ஓட்டையும் கடந்த பிறகே வெண் பருப்பை அடைய முடியும்.

5. அதுபோல், வெண்மையான பருப்பைப் போன்றிருக்கும் சுயம் பரஞ்சோதியாகிய இறைவனைக் காண வேண்டுமென்றால், முதன் முதலில் ஸ்தூலத்தை மனிதன் கடக்க வேண்டும்.

**6.** சூக்ஷ்மம் என்ற அடுத்த நிலையில் மனிதன் பல்வேறு மன மாசுகளை வைத்துக் கொண்டிருக்கிறான். இவற்றையும் அவன் கடக்க வேண்டும்.

**7.** ஸ்தூலத்தையும் சூக்ஷ்மத்தையும் கடந்த பிறகு, மூன்றாம் நிலையான அறிவுடலையும் மனிதன் கடக்க வேண்டும்.

**8.** இம்மூன்று நிலைகளையும் கடந்த பிறகே சுயம் பரஞ்சோதியாக விளங்கும் இறைவனைக் காண முடியும்.

**9.** ஆலயத்தில் உடைக்கப்படும் தேங்காய் இத் தத்துவத்தை மீண்டும் மீண்டும் நமக்கு உணர்த்துகின்றது.

# வழிபாட்டின் உட்பொருள்

## அத்தியாயம் 7

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மஹரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி 1992)

**1.** *ப்ரஹ்ம ரந்த்ரம்* என்றும் *தஸம த்வாரம்* என்றும் அழைக்கப் படும் உடலின் பத்தாவது துவாரம் நம் உச்சந்தலையில் இருக்கிறது.

**2.** சிறு குழந்தையின் உச்சந்தலையைத் தொட்டுப் பார்த்தால் அதில் ஒரு குழி இருப்பதை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

**3.** இந்தப் ப்ரஹ்ம ரந்த்ரத்தின் வாயிலாக பிரம்மா உடலினுள் புகுந்து ஒளி கொடுத்தான் என்றும், இந்தப் ப்ரஹ்ம ரந்த்ரத்தின் வாயிலாக

**உயிர் பிரிந்தால் கபால மோக்ஷம் கிட்டும் என்றும் உபநிஷதங்கள் எடுத்துரைக்கின்றன.**

**4. ப்ரஹ்ம ரந்த்ரமே ஸ்வர்க வாசல் என்றும் அழைக்கப்படுகிறது.**



# திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார் அருளிய

# குண்டலினி யோக தியானம்

*(தொகுப்பாசிரியரின் குறிப்பு: குண்டலினி யோக தியானத்தினால் ஏற்படும் நன்மைகளை இப்பகுதி விளக்குகிறது.)*

## அத்தியாயம் 1

(ஏழுநாள் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. 1992.)

1. பிறப்பிலேயே ஒருவர் உயர்ந்த நிலைகளைப் பெற்றிருந்தாலுங்கூட அவர் மற்றொருவரிடம் குரு உபதேசம் பெறவேண்டும் என்ற நியதி ஒன்று உண்டு.

2. பரமபிதாவின் குமாரர் என அழைக்கப்பட்ட ஏசு நாதருங்கூட குரு யோவான் என்ற மறைஞானியிடமிருந்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார்.

3. இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்களும், 7-1-1938ல், தனது 38-வது வயதில் ஞானோபதேசத்தைப் பெற்றுக்கொண்டார்.

4. அதன்பிறகு, அன்றுவரை மறைபொருளாக வைக்கப்பட்டிருந்த குண்டலினி சக்தியைக் குறித்து அவர் பல ஆராய்ச்சிகள் செய்து வந்தார்.

5. அவ்வாராய்ச்சிகளின் விளைவாக தாம் கண்டறிந்த பல்வேறு உண்மைகளை எவ்வித ஒளிவும் மறைவுமின்றி உள்ளதை உள்ளவாறு எடுத்துரைத்தவர்தான் ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள் ஆவார்.

6. உளப்பூர்வமாக, உணர்வுப்பூர்வமாக தாம் அனுபவித்த குண்டலினி சக்தியை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் உந்தப்பட்ட ஞானவள்ளல், இந்த குண்டலினி உபதேசத்தை எளிமையாக்கி, முறைப்படுத்தி, எவ்வித பேதமுமின்றி எல்லோருக்கும் வாரி வாரி வழங்கியுள்ளார்.

7. இந்தக் குண்டலினி சக்திதான் உங்கள் படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தும் தெய்வீக சக்தி.

8. இந்தத் தெய்வீக சக்தியால் நீங்கள் உங்கள் உடல் பிணியையும் மன மாசுகளையும் நீக்கிக்கொள்ள முடியும்.

9. உடல் பிணி என்றால் என்ன? அது ஏன் ஏற்படுகிறது?

10. வாதம், பித்தம், சிலேத்துமம் எனும் முத்தோஷங்கள் குறைந்தாலும் அல்லது மிகுந்தாலும் உடல் பிணி ஏற்படுகிறது.

11. நீரிழிவு போன்ற உடல் பிணிக்கு குண்டலினி தியானம் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது.

# குண்டலினி யோக தியானம்

## அத்தியாயம் 2

(மகான் பரஞ்சோதியார் மேற்கொண்ட ஏழு நாள் தவவேள்வி நிறைவு நாளன்று ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. 1992)

**1.** உடலுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும், புத்துணர்வையும், புதுத் தெம்பையும் கொடுக்கும் பிராண சக்தியை நன்றாக கிரகித்துக் கொள்ளுங்கள்.

**2.** இந்த மூச்சு உடலினுள்ளே சென்று நுரையீரல் முழுவதும் நிரம்பி, இரத்த அணுக்களில் கலந்து, அசுத்த இரத்தத்தைத் தூய்மைப் படுத்தட்டும்.

**3.** தூய்மையடைந்த இரத்தம் மூளைப் பகுதிகளுக்குச் சென்று மூளையை நன்கு இயக்கம் பெறச் செய்யட்டும்.

**4.** நல்லெண்ணமே இருதயத்தையும் மூளையையும் குளிரச் செய்கின்றது. நல்லெண்ணமே இருதயத்தையும் மூளையையும் திடப்படுத்துகின்றது.

**5.** உங்கள் நல்லெண்ணமே உங்கள் வாழ்வை உயர்விக்கச் செய்கின்றது.

**6.** நல்லெண்ணமே உலகமாகின்றது. நல்லெண்ணமே உயிராகின்றது. நல்லெண்ணமே கடவுளாகின்றது.

**7.** நல்லெண்ணத்தை போதிப்பதே சத்சங்கங்களின் முக்கிய நோக்கம்.

8. சத்சங்கங்களின் வாயிலாக உங்கள் எண்ணங்களை நீங்கள் தூய்மைப்படுத்திக்கொள்ளும் பொழுது, உங்கள் உடலும் உள்ளமும் வலிமையும் வன்மையும் பெறுகின்றன. உடலினுள் இருக்கும் ஆத்ம சக்தியும் அப்பொழுது விழிப்படைகின்றது.

9. புருவ மத்தியின் வாயிலாக நீங்கள் கேட்கும் இந்த நல்ல வார்த்தைகள் உங்கள் உடல் முழுவதும் பரவி உடலுக்கு உற்சாகத்தையும் உறுதியையும் அளிக்கட்டும்.

10. அறிவு தெளிவு பெற்று, மதி நிலைக்கட்டும். அன்பு பெருகட்டும், அருள் சொரியட்டும்.

11. ஆனந்த சமரசம் அண்ட பிண்டங்களில் எல்லாம் நிறைந்து உலகத்தில் அமைதியை ஏற்படுத்தட்டும்.

# குண்டலினி யோக தியானம்

## அத்தியாயம் 3

(மகான் பரஞ்சோதியார் அவர்கள் 09-02-1992 அன்று கோலாலம்பூரில் "தமிழ் நேசன்" பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியிலிருந்து தொகுக்கப்பட்டது).


1. தியானம் என்பது குறிப்பிட்ட ஒன்றின் மீது மனத்தை நிறுத்தி அதன் வழி அகப் பொருளை அடைதல் என்பதாகும்.

2. தியானத்தின் மூலம் உடல் நலம் பெறலாம்.

3. தியானத்தின் மூலம் ஞானம் பெற்று பரம்பொருளை அடையலாம்; பரம்பொருளாகவே மாறலாம்.

4. **தியானமானது மனத்திலும் நரம்பு மண்டலத்திலும் அமைதியை ஏற்படுத்துகின்றது என்பதை உடலியல் வல்லுநர்களும் மனவியல் அறிஞர்களும் இப்பொழுது ஒப்புக் கொள்கின்றனர்.**

5. **அறிவியல் கண்ணுக்கும் ஆய்வுக்கும் புலப்படாத "ஆன்மா" என்னும் பரம்பொருள் இருப்பதை உயர் நிலை தியானத்தின் மூலம் அறியலாம்.**



# திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார்

## அருளிய

# திருமூர்த்தம்

*( தொகுப்பாசிரியரின் குறிப்பு: சரணாகதி தத்துவம், குரு தத்துவம், குருவின் கடமை, சத்திய யுகம், உலக நல தவ வேள்வி ஆகியவற்றை இப்பகுதியில் மகரிஷி பரஞ்சோதியார் விளக்கியுள்ளார்கள்.)*

## அத்தியாயம் 1

(முதல் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு. ஜனுவரி 7, 1992)

**1.** நம்பினோர் கெடுவதில்லை என்பது நான்கு மறையின் தீர்ப்பு.

**2.** உயர்ந்த ஒன்றை நான் நம்பினேன். இடையூறுகள், துன்பங்கள், தொல்லைகள் எது வந்தாலும் கலங்காது அதை உறுதியாகப் பற்றினேன்.

**3.** அது என்னை உயர்ந்த நிலைக்கு அழைத்து வந்திருக்கிறது. உங்களையும் அந்த உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமாய் இருக்கிறது.

4. "கடந்து கடந்து சென்று பார்த்து, எட்டாத கற்பகத்தை எட்டி எட்டி உட்சென்று நோக்க நோக்க, அப்புறமும் இப்புறமும் ஏக பராபரமும் என்னுள் நான் அறிந்தேன்." [7]

5. இந்த "நான்" என்ற தத்துவத்தை அறிந்ததினால் ஆனந்தம் கொண்டேன். நான் பெற்ற ஆனந்தத்தை உங்களுக்கெல்லாம் அளிப்பதற்காகவே இந்த வேள்வியை இயற்றினேன்.

6. என் கைகளைப் பற்றிக் கொண்டு நீங்களும் மேல் நோக்கி வாருங்கள். எனது இரு கரங்களும் எப்பொழுதும் உங்களை உயர்த்துவதற்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கும்.

7. உங்களையெல்லாம் அந்த உயர்ந்த நிலைக்கு அழைத்துச் சென்று, உன்னதமான பரம் பொருளோடு உங்களைச் சேர்க்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

8. ஆனால், "இப்பிரபஞ்சத்தை இயக்கும் உறுபொருள் எதுவோ, அதுவாகவே நீ இருக்கின்றாய்" என்ற உண்மையை இந்த மனிதன் இன்னமும் உணரவில்லையே!

9. மனிதனின் உள்ளுணர்வைத் தூண்டி விட்டால், அவன் இவ்வுண்மையைப் புரிந்து கொண்டு சந்தோஷம் அடைவானே, அவன் மனமும் தூய்மை பெறுமே!

10. தனி மனிதன் சந்தோஷம் அடைந்தால் அவன் குடும்பமும், அவனைச் சுற்றியுள்ள அனைவரும் சந்தோஷம் அடைவார்களே.

[7] ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் கூறிய வார்த்தைகள்.

11. என்று இந்த சமுதாயம் சந்தோஷம் அடைகின்றதோ, அன்றுதான் இந்த உலகமும் சமாதானம் அடையும். அப்பொழுதுதான் என் கடமையும் முடியும்.

12. இந்தக் கடமையை நிறைவேற்றும் பொருட்டே உடல் என்னும் இக்கருவி இப்பொழுது எனக்கு பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

13. சத்திய யுகத்தைத் தோற்றுவிக்க புதிதாக எங்கிருந்தோ யாரும் வரவேண்டிய அவசியமில்லை. கலி நீங்க புதிதாக ஒரு தேவன் பிறக்க வேண்டிய அவசியமில்லை.

14. உங்கள் மத்தியில் அந்தத் தேவன் இப்பொழுது உதித்துக் கொண்டிருக்கிறான். உங்கள் மத்தியிலும் இருக்கின்றான். உங்கள் அகத்திலும் இருக்கின்றான்.

15. புறத்தில் கண்டு வழிபடுவதை விடுத்து அகத்திலேயே வழிபட ஆரம்பியுங்கள்.

16. நீங்கள் என்னை வணங்கினாலும் ஒன்றுதான், இந்தப் பந்தல்களை வணங்கினாலும் ஒன்றுதான். ஏனெனில், பந்தல்களும் ஜடம், என் உடலும் ஜடம்.

17. நீங்கள் வணங்குவது இந்த உடலையல்ல. உடலில் இருந்து கொண்டே இவ்வுடலை இயக்கும் அந்த உத்தம புருஷனையே நீங்கள் வணங்குகின்றீர்கள்.

18. உங்கள் உடம்பினுள்ளேதான் உறுபொருளும் இருக்கின்றது. அதனால்தான் திருமூலரும் இப்படிப் பாடுகின்றார்:

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்.
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்,
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்.
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின் றேனே.

# திருமூர்த்தம்
# அத்தியாயம் 2

**1.** கடலின் தன்மை என்ன? தன்னிடம் வருகின்ற ஆற்று நீர் அனைத்தையும் தன்னுடன் சேர்த்து அதைக் கடலாகவே மாற்றி விடுகின்றது. அந்தக் கடலைப் போன்றவர்தான் குரு.

**2.** குரு, மக்களின் குற்றங்களைப் பார்ப்பதில்லை.

**3.** மக்களின் நற்குணங்களையும் நன்மைகளையுமே குரு பார்த்துக் கொண்டிருக்கிறார்.

**4.** குருவின் கடமை என்ன? தன்னைப் போலவே மக்கள் அனைவரையும் உயர்த்துவதுதான்.

5. சத்குரு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக மாத்திரம் தோன்றியவர் அல்லர்.

6. சத்குருவை தரிசித்த நீங்கள் அவரிடம் உங்கள் குறைகளை முறையிடக் கூடத் தேவையில்லை.

7. மக்களின் மன சஞ்சலத்தை நன்றாக உணர்ந்தவர்தான் சத்குரு.

## திருமூர்த்தம்
## அத்தியாயம் 3

(கோலாலம்பூரிலுள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயத்தில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பெப்ருவரி 1992)

1. நீங்கள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபடும் போதெல்லாம் உங்கள் வேண்டுதல்களையும் கோரிக்கைகளையும் அங்கேயே விட்டு விட்டு வருகின்றீர்கள்.

2. இக்கோரிக்கைகள் எல்லாம் எங்கே செல்லுகின்றன? அவை, தவசிகளையும், தீர்க்க தரிசிகளையும், உலக நன்மைக்காகப் பாடு பட்டுக் கொண்டிருக்கும் மகா புருஷர்களையும்தான் வந்து அடைகின்றன.

3. பெண்களின் கூக்குரல்களும், ஆண்களின் குமுறல்களும், பாமர மக்களின் வேண்டுதல்களும் ஞானியர்களாகிய எங்களையே வந்தடைகின்றன.

4. இறைவனை அகத்தில் கண்டுணர்ந்து பேரானந்தம் அடைபவர்களே ஞானியர்கள்.

5. உயர்ந்த, பேரானந்த நிலைகளிலிருந்து கீழிறங்கி வந்து மனிதர்களின் குமுறல்களையும் கூக்குரல்களையும் கேட்க வேண்டும் என்ற அவசியம் ஞானியர்களுக்கு இல்லை.

6. ஏறத்தாழ பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1976ம் ஆண்டில், நானும் பேரானந்த நிலையை முதலில் அடைந்த பொழுது, அந்த உயர்ந்த நிலையிலேயே இருந்து விடலாமா என நினைத்ததுண்டு.

7. ஆனால், "*பேரானந்த நிலைகளிலிருந்து ஞானியர்கள் கீழிறங்கி வரவில்லையென்றால், உலக மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் துடைப்பது யார்?*" என்ற கேள்வி எனக்குள் அடிக்கடி தோன்றிற்று.

8. எனவேதான், அந்த உயர்ந்த நிலைகளிலிருந்து கீழிறங்கி வந்து, "*யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*" என்ற அருள் வாக்கு நிறைவேறும்படியாக, மக்கள் மத்தியில் உயர் தர்ம நெறிகளையும் குண்டலினி யோக தியான முறைகளையும் போதித்து வருகிறேன்.

9. மக்களின் மன மாசுகளை அகற்றி, அவர்களை எப்படியாவது மேம்படுத்தியே தீர வேண்டும் என்று எனக்கு ஏற்பட்ட ஏக்கத்தின் விளைவே நான் சமீபத்தில் மேற்கொண்ட உலக நல மகா தவ வேள்வியாகும்.

10. உலக பிரச்சனைகளையெல்லாம் தீர்ப்பதற்கு என்னிடம் ஒரு மருந்து இருக்கிறது.

**11.** மக்களின் மாசுகளையெல்லாம் நீக்குவதற்கு ஓர் அரிய துடைப்பத்தை மேலிருந்து கொண்டு வந்திருக்கின்றேன்.

**12.** ஒவ்வொருவரும் அதை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். மன மாசுகள் நீங்கும். அப்பொழுது அந்த அருட் பெருஞ்சோதியை உங்கள் உள்ளத்திலேயே நீங்கள் காண்பீர்கள்.

# திருமூர்த்தம்

## அத்தியாயம் 4

*(முதல் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு, ஜனவரி 7, 1992.)*

**1.** இனி வரும் நாள்களில் சுமைகளைத் தூக்கிக் கொண்டு நீங்கள் படிகளில் ஏறிச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

**2.** எஸ்கலேட்டரைப் போன்ற கருவியை இத் தவவேள்வியில் நான் கண்டு பிடித்திருக்கிறேன். அதுதான் ஆன்மிக எஸ்கலேட்டர்.

**3.** எஸ்கலேட்டரின் முதற் படியில் நீங்கள் காலை எடுத்து வைத்தால் போதும். அது உங்களை மேலே கொண்டு வந்து நிறுத்திவிடும்.

**4.** அதைப் போன்றே இந்த ஆன்மிக எஸ்கலேட்டரும் உங்களை ஓர் உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும்.

**5.** இந்த ஆன்மிக எஸ்கலேட்டரின் மூலமாக நீங்கள் நிச்சயமாக அந்த உன்னதமான நிலையை, பேரானந்த நிலையை, சும்மா இருந்து சுகம் காணும் நிலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? புறத்தில் அலைகின்ற உங்கள் மனத்தை உட்புறமாகத் திருப்ப வேண்டும்.

7. உள்ளே, உங்கள் உணர்வாக நான் இருந்து கொண்டு இருக்கிறேன்.

# திருமூர்த்தம்

## அத்தியாயம் 5

(முதல் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு, ஜனுவரி 7, 1992)

1. உடல் பிணி, உளப்பிணி, உயிர்ப்பிணி என்னும் முப்பிணிகளை நீக்கும் மருந்து என்னிடம் இருக்கிறது.

2. என் இருதயச் செல்வங்களே, இந்த அரிய மருந்தை நீங்களும் உட்செலுத்திப் பாருங்கள். ஞானப் பாலை ஊற்றுவதற்கு இங்கே கடையை விரித்திருக்கிறேன்.[8]

3. பாத்திரமாகிய உங்கள் உடலை தூய்மைப் படுத்திக் கொண்டு வாருங்கள்.

[8] ஒப்பிட்டுப் பார்க்க: தெய்வ கிருபையைக் குறித்து ஜெர்மானிய மறைஞானியும் இறையியல் வல்லுநருமான மைய்ஸ்டர் எக்ஹார்ட் (Meister Eckhart, 1260? - 1328? A.D.) இப்படி கூறிச்சென்றுள்ளார்: "God is bound to act, to pour Himself into thee, as soon as He shall find thee ready."

4. ஏனென்றால், நான் அளிக்கக் கூடிய இந்த ஞானப்பால் நல்லதாக, பரிசுத்தமாக இருக்கிறது. தூய்மையற்ற பாத்திரத்தில் ஞானப்பாலை ஊற்றினால் அது கெட்டுவிடுமல்லவா?

5. நான் கொடுக்கும் ஞானப் பாலில் குறையில்லையே. பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மைகளில் அல்லவா நீங்கள் குறைவு பட்டுள்ளீர்கள்.

## திருமூர்த்தம்

## அத்தியாயம் 6

(முதல் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு, ஜனுவரி 7, 1992)

1. சிறு வயதிலிருந்தே எனக்கு எதிரிட்டுக் கும்பிடும் பழக்கம் கிடையாது.

2. மாறாக, எந்தக் கடவுளின் படத்தைப் பார்த்தாலும் அந்தக் கடவுளாகவே நான் மாற வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் என் மனத்தில் உறுதியாக இருந்தது.

3. ஒரு நாள், எது என்னவென்று தெரியாத எனது ஏழாவது வயதில் என் இல்லத்தில் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த பொழுது, என் உடலில் இருந்து ஏதோ ஒன்று பிரிந்து உடலுக்கு மேலே சென்று ஊசலாடிக் கொண்டிருந்தது.

4. எனக்கோ பயம். "கட்டிலில் படுத்திருப்பது நானா, அல்லது மேலே ஊசலாடிக் கொண்டிருக்கும் உருவம்தான் நானா?" என்ற குழப்பம். இந்த

அனுபவத்தை யாரிடம் சொல்வது, எப்படிச் சொல்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன்.

5. பல ஆண்டுகளுக்குப் பிறகு இது போன்ற அனுபவம் எனக்கு மீண்டும் ஏற்பட்டது. அதாவது, ஞான வள்ளல் பரஞ்சோதி மகான் அவர்களிடம் ஞானதீக்ஷை பெற்ற இரண்டு மாதங்களுக்குள்ளாக, ஒரு நாள் தவ நிலையில் இருக்கும் பொழுது அதே அனுபவத்தை மறுபடியும் பெற்றேன்.

6. அந்த அனுபவத்தின் மூலம் நம் உடலை இயக்கும் உறுபொருளின் உண்மை நிலையை நன்கு புரிந்து கொண்டேன்.

7. அதைத் தொடர்ந்து படிப்படியாக காயசித்தி, யோகசித்தி, ஞானசித்தி எனும் மூவகை சித்திகளையும் தவ வலிமையாலும் குருவருளாலும் அடையப் பெற்றேன்.

8. சித்திகளைப் பெற்ற எங்களைப் போன்ற சித்தர்களின் சுவாசம் சற்று மாறுபட்ட விதத்தில் இயங்குகின்றது. எங்கள் மூச்சின் இயக்கம் கீழே வராது.

9. உள்நோக்கியே மூச்சை இழுக்க இழுக்க, இப்பிரபஞ்சத்தில் இருக்கும் சக்திகளை எங்களுடைய உயிர் ஆற்றலாக, பிராண ஆற்றலாக மாற்றிக் கொள்ளக் கூடிய ஒரு நிலை ஏற்படுகின்றது. அதுதான் காய சித்தி.

10. உடலும் மனமும் ஒன்றுபட்டு அந்த உயிர்ப் பொருளோடு இணைவதுதான் யோக சித்தி.

**11.** சித்தி நாயகனை தன்னுள்ளே அறிந்தறிந்து விடுவதே ஞானம். இந்தகைய ஞானம் கிட்டியதால் ஞான சித்தியும் கைவரப் பெற்றோம்.

**12.** மேல் நிலையில் இருந்து இந்தப் பரமானந்த சுகத்தை அடைந்தோம். யாம் அடைந்த பரமானந்த சுகத்தை உலக மக்கள் அனைவரும் எளிதில் பெற வேண்டும் என்று சித்தம் கொண்டுள்ளோம்.

**13.** எனவேதான், பலதரப்பட்ட மக்களிடமும் பேசி, உணர்த்தி, இறையுணர்வாக அவர்களை மாற்றி, எம்மைப் போலவே அவர்களை உயர்த்துவதற்காகவே யாம் கீழிறங்கி வந்துள்ளோம்.

**14.** உலக நலத்திற்காகவும், உலக அமைதிக்காகவும், மனித குலத்தை சூழ்ந்திருக்கும் ஆபத்துகள் அனைத்தையும் மக்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகவும் **16-12-1991** முதல் **7-1-1992** வரை மூன்று வார காலம் உண்ணாது, எவரையும் பாராது, யாரோடும் பேசாது யாம் தவம் இயற்றியுள்ளோம்.

# திருமூர்த்தம்

# அத்தியாயம் 7

(முதல் தவ வேள்வி நிறைவு விழாவில் மகரிஷி பரஞ்சோதியார் ஆற்றிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. பவானி, தமிழ் நாடு. ஜனவரி 7, 1992)

**1.** இந்த உடல் மூன்று நாள்களுக்கு உணவு உட்கொள்ளவில்லை எனில் உடலின் எடை குறையும் என மருத்துவ விஞ்ஞானம் கூறுகிறது.

**2.** ஆனால், எந்த எடையோடு உள்ளே சென்றேனோ அதே எடையோடு வெளியே வந்திருக்கின்றேன்.

**3.** **16-12-1991**ல் தெய்வீகத்திற்குள்[9] செல்லும் போது எனது எடை **60** கிலோகிராம். மூன்று வாரங்கள் கழித்து, **7-1-1992**ல் வெளியே வரும் போதும் எனது எடை அதே **60** கிலோகிராம்தான்.

**4.** இது எப்படி சாத்தியமாகும்? அன்று, கண்ணணபிரான் உட்கொண்ட உணவு, துர்வாச முனிவரின் சீடர்களுக்கெல்லாம் உணவு உண்ட நிறைவைத் தந்தது.

**5.** இன்று, *"வேள்வியில் இருக்கும் குருவிற்கு அர்ப்பணம்"* எனக் கூறி நீங்கள் உணவை உட்கொண்டீர்கள். நீங்கள் உண்ட அந்த உணவு என் வயிற்றை நிரப்பி விட்டது. ▣

[9] மகரிஷியின் முதலாவது தவ வேள்வி, "தெய்வீகம்" என்ற பெயருடைய வீட்டில் நடை பெற்றது.

# திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார்

அருளிய

# மனிதனின் உண்மை நிலை

(தொகுப்பாசிரியரின் குறிப்பு: இப்பகுதியை வாசித்துவிட்டு தத்துவ விசாரம் செய்தால் சக்கரம் போன்ற நம் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சம்பவமும் இறைவனின் சித்தத்தின்படியேதான் நடக்கிறது என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம். சாந்த சித்தத்துடன் மரணத்தை சந்திக்கக்கூடிய ஞானத்தையும் பெற்றுக் கொள்ளலாம். - 1996-ஆம் ஆண்டு மகரிஷி எழுதிய *மனிதனின் உண்மை நிலை* என்ற கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது. )

## அத்தியாயம் 1

1. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் எவ்வளவு சீக்கிரத்தில் அழிந்து போகின்றன என்பதைக் குறித்து நாம் நன்கு சிந்திக்க வேண்டும்.

2. மனிதனுடைய தேகமும் அழிந்து போகிறது. அவன் இறந்தபின் அவனைப் பற்றிய நினைவுங்கூட சில மாதங்களுக்குப் பின் மறைந்து போகிறது.

3. மரணம் என்றால் என்ன என்பதை நன்கு ஆராய்ந்தால், அது பிரகிருதியின் ஓர் இயல்பே தவிர வேறொன்றுமில்லை என்பது புலப்படும்.

4. இயல்பாய் நடக்கும் ஒரு விஷயத்தைக் கண்டு குழந்தைகள் அஞ்சலாம். ஆனால் அறிந்தவர்கள் ஏன் அதைக் கண்டு மனங் கலங்க வேண்டும்?

5. இறப்பு என்பது இயல்பு மாத்திரமல்ல, இறப்பதால் பிரகிருதியில் புத்துயிர்கள் உண்டாவதற்கும் வழி பிறக்கும்.

6. மனிதனுடைய ஆயுள் மிகக் குறுகியது. அவனுடைய மனத்தைக் கவரும் பல விஷயங்களும் நிலையற்றவை. மனிதனுடைய உணர்ச்சியும் தெளிவற்றது. உடலும் அழிவுறும் பொருள்களால் ஆக்கப் பட்டது.

7. மனமோ, நீர் மேல் குமிழி போன்றது. விதியும் அறிய முடியாதது.

8. புகழ் என்றால் என்ன? உலக விஷயங்களின் உண்மை நிலைதான் என்ன? அவற்றில் சில சுகம் தருவதுபோல் ஏமாற்றி நம்மை வலையில் இழுக்கும். வேறு சில பல இன்னல்கள் தந்து நம்மைப் பயமுறுத்தும்.

9. இவையெல்லாம் உண்மையில் எவ்வளவு அற்பமானவை, பயனற்றவை, இழிவானவை, நிலையற்றவை என்பதை அறிந்து விவேகமாக நடந்து கொள்.

10. சுருங்கச் சொல்லின், மனித உடலோடு தொடர்புடையவை யெல்லாம் நீரோட்டம் போன்றவை. மனத்தோடு சம்பந்தப் பட்டவையெல்லாம் கனவு போன்றவை.

11. ஆயுள் நாளெல்லாம் நடப்பதோ ஒரு பெரும் போர். இறந்த பின் அடையும் புகழோ ஒரு பெரும் அந்தகாரம். ஆனால்

இவற்றிற்கிடையில் ஞானம் ஒன்றே நமக்கு சிறந்த வழிகாட்டியாக் அமைகிறது.

# மனிதனின் உண்மை நிலை
## அத்தியாயம் 2

1. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தெய்வத் தன்மையுடைய ஆத்மா குடிகொண்டிருக்கிறது. ஆத்மாவிற்கு தீங்கும் நோயும் உண்டாகாமல் பாதுகாக்கிறது ஞானம்.

2. சுகத்திற்கும் துக்கத்திற்கும் மேலாக ஆத்மாவை நிறுத்தி வைக்கிறது இந்த ஞானம்.

3. பயனிலாச் செயல், மோசம், கபடம் ஆகிய காரியங்களைச் செய்யாதிருத்தலே ஞானம்.

4. தனக்கு, ஒருவன் ஒன்றைச் செய்ய வேண்டும், வேறொன்றைச் செய்யாதிருக்க வேண்டும் என்று எதிர்பாராமல் இருத்தலே ஞானமாகும்.

5. எது நேரிட்டாலும் அதற்கு காரணமொன்று இருக்கிறது. எந்தக் கடவுள் நம்மைப் படைத்தாரோ, அல்லது எந்தப் பிரகிருதியின் அமைப்பில் நாம் ஒரு பாகமாய்ப் பிறந்தோமோ, அந்தக் கடவுளும் அந்தப் பிரகிருதியுமே இவற்றிற்கெல்லாம் காரணம் என்றறிந்து உணரும் அறிவே ஞானம்.

6. சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாவித்து, இறுதியில் சாந்த சித்தத்துடன் மரணத்தை எதிர் கொள்வதே ஞானமாகும்.

7. மரணம் என்றால் என்ன? மரணத்தைக் கண்டு நாம் ஏன் கலங்க வேண்டும்? நாம் யார்? நமது உண்மை நிலைதான் என்ன?

8. எந்தெந்த மூல தாதுக்களின் சேர்க்கையினால் இந்த உடல் உருவாக்கப்பட்டதோ, அந்தந்தத் தாதுக்களாக மறுபடியும் இவ்வுடல் பிரிந்து போதலே மரணமாகும்.

9. சில பொருள்களின் சேர்க்கையினால்தான் நாம் உருவாக்கப் பட்டோம். ஆனால் இந்தப் பொருள்களுக்கு அழிவும் குறைவும் கிடையாது. அவை ஓயாமல் உருவம் மாறியும் அமைப்பு மாறியும் இருந்து கொண்டேயிருக்கும். அவைகளைப் பற்றி கவலையில்லை.

10. அவ்வாறிருக்க, அந்தப் பொருள்களின் சேர்க்கையாகிய இந்த உடலில் ஏற்படும் மாறுதலைக் கண்டு நாம் ஏன் அஞ்ச வேண்டும்?

11. மரணம் பிரகிருதியின் இயல்பாகும். இயல்பான ஒரு விஷயம் ஒருபோதும் தீங்காகாது.

12. இப்பிரகிருதியில் இருந்துதான் நம் உடலினுள் இருக்கும் ஒவ்வொரு உறுப்பும் உண்டாக்கப் பட்டுள்ளது. நிலத்திலிருந்து ஒரு பாகமும், நீரிலிருந்து ஒரு பாகமும், தீயிலிருந்து ஒரு பாகமும் சேர்த்து உருவாக்கப்பட்டதுதான் இந்த உடல்.

13. அவ்விதமே, அறிவு உருவமான நம் உள்ளமும் மனமும் ஒரு மூல காரணத்தில் இருந்தே உண்டாகியிருக்க வேண்டும். உடலின்

பல்வேறு பகுதிகளெல்லாம் மீண்டும் தத்தம் மூல காரணங்களுடன் ஒன்றுப் பட்டுப் போதலே மரணமாகும்.

14. எப்பொருளும் மாறுமேயன்றி முற்றிலும் அழிந்து போகாது.

15. பிறப்பைப் போலவே இறப்பும் இயற்கையின் இரகசியமாகும். பஞ்ச பூதங்களின் சேர்க்கையே பிறப்பாகும். அவற்றின் பிரிவே மரணமாகும். இதைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை.


16. இறந்து போனால் இவ்வுலகத்தை விட்டே நீ நீங்கி விடுவாய் என்று நினைக்காதே. மாறி மாறி வெவ்வேறு உருவாய் நீ மீண்டும் வருவாய்.

17. உன் உடலிலுள்ள தாதுக்கள் அனைத்தும் பிரிந்து மீண்டும் வெவ்வேறு பொருள்களில் போய்ச் சேரும். அவ்விதம் சேர அவைகளுக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை.

18. இத்தாதுக்கள் அனைத்தும் உன்னுடையவை என நீ நினைக்கலாம். ஆனால் அவையனைத்தும் பிரகிருதிக்கே சொந்தமானவை.

19. எந்தப் பிரகிருதியிலிருந்து நீ உற்பத்தியானாயோ அந்தப் பிரகிருதியினுள் ஒன்று பட்டு நீ மறைந்து போவாய். உன்னைப் பெற்றெடுத்தப் பொருளுடன் மறுபடியும் நீ சேர்ந்து விடுவாய்.

20. அதனால் என்ன? காரணத்தில் காரியம் உருமாறி மீண்டும் சேர்ந்து விடுவதுதான் இறப்பின் இலக்கணம். இதைக் குறித்து ஏன் துக்கப்படுகிறாய்?



மரணம் என்றால் என்ன? மரணத்தைக் கண்டு நாம் ஏன் கலங்க வேண்டும்? நாம் யார்? நமது உண்மை நிலைதான் என்ன?

எந்தெந்த மூல தாதுக்களின் சேர்க்கையினால் இந்த உடல் உருவாக்கப்பட்டதோ, அந்தந்தத் தாதுக்களாக மறுபடியும் இவ்வுடல் பிரிந்துபோதலே மரணமாகும்.

**மனிதனின் உண்மை நிலை 2 : 7, 8**

# மனிதனின் உண்மை நிலை
# அத்தியாயம் 3

1. சந்தேகங்கள் எழும் பொழுதெல்லாம், ஆத்ம சிந்தனை செய்த காலத்தில் நீ கண்ட உண்மைகளை நினைத்துக் கொள். வீண் சிந்தனை வேண்டாம். சஞ்சலப்படாதே. சுதந்திரனாக இரு.

2. ஒரு விஷயத்தைக் குறித்து சிந்திக்கும் பொழுது, ஒரு நாள் நீ நிச்சயம் இறந்து போவாய் என்ற உண்மையை நினைவில் வைத்துக் கொண்டு அதை சிந்திப்பாயாக.

3. உன் உள்ளத்தில் எப்போதும் உறுதியாக பதிந்திருக்க வேண்டிய பெரிய உண்மைகள் இரண்டு உண்டு. ஒன்று: உன் ஆத்மாவை இன்ப துன்பங்கள் தீண்டா. மற்றொன்று: உனக்குப் புலப்படும் சகல உருவங்களும் இறுதியில் அழிந்து போகும்.

4. நீ எத்தனையோ அழிவைக் கண்டிருக்கிறாய். அதை அடிக்கடி நினைத்துப் பார். உன் சஞ்சலத்திற்குக் காரணம் உன் உள்ளத்திலேயே முளைக்கிறது என்பதை அறிந்து கொள்.

5. மாறுவதே உலகத்தின் இயல்பு. மனிதனின் எண்ணங்களே அவன் வாழ்வு.

6. சகலமும் ஒரு நாள் மண்ணாய் மாறி நிலத்தில் போய்ச் சேரும். அந்த நிலமும் மாறி மாறி வேறு உலகம் தோன்றும். பின்பு அதுவும் மாறும். இப்படியே சதா காலமும் நடந்து கொண்டேயிருக்கும்

மாற்றத்தைக் குறித்து நீ சிந்திக்கும் பொழுது நிலையில்லாத விஷயங்களில் நீ வைத்திருக்கும் பற்று குறைந்து போகும்.

7. சித்து, சடம் ஆகிய இவ்விரண்டின் சேர்க்கையே மனிதன். இவ்விரண்டில் எதுவுமே சூன்யமாக அழிந்து போகாது. அவை சூன்யத்திலிருந்து உண்டாகவில்லை, எனவே அவை சூன்யமாகப் போக முடியாது.

8. ஒவ்வொரு பொருளும் பகுதியும் விகாரப்பட்டு இறுதியில் வேறு பொருளில் போய்ச் சேரும். மறுபடியும் அவ்வுருவமும் மாறி மாறி வெவ்வேறு பொருள்களில் போய்ச் சேரும்.

9. அனந்த காலமும் இப்படி உரு மாறிக் கொண்டிருக்கும் உனக்கு அழிவென்பது கிடையாது.

10. சர்வ வியாபகமான பொருளில் நீ ஓர் அற்பமான பகுதி என்பதை சற்று சிந்தித்துப் பார். பிரபஞ்சத்தில் நீ ஒரு சிறிய பாகமே என்பதை எப்பொழுதும் நினைவில் வை.

11. அனந்தமான யுகங்களில் உன் ஆயுள் ஒரு நொடிப் பொழுது என்பதை மறந்து விடாதே. உலக நிகழ்வுகளோடு ஒப்பிடுகையில் உன் வாழ்வு ஓர் அணுவைப்போன்றது.

# மனிதனின் உண்மை நிலை

## அத்தியாயம் 4

1. நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தெய்வாம்சம் எனும் ஈஸ்வரத்துவம் குடி கொண்டிருக்கிறது. அதுவே உள்ளிருந்து நமக்கு அறிவூட்டி, நம்மைப் பாதுகாத்து, நாம் செல்ல வேண்டிய சரியான வழியில் நம்மை அழைத்துச் செல்கிறது.

2. ஒருவனைத் திருத்த முடியாமற் போனால் அவனை வெறுக்காதே. கடவுள் மனிதனிடத்தில் தயை காட்டுவது போல் நீயும் அவனிடம் அன்பாய் இரு.

3. மறைந்து கிடக்கும் உன்னுடைய எண்ணங்களை கடவுள் நேரில் காண்கிறார். நல்லான்மாக்களுடன் அவரது உள்ளம் எப்பொழுதும் கலந்து உறவாடுகிறது.

4. கவலையற்று மெய்யறிவுடன் வாழ நீ விரும்பினால், உயிரை மறந்து, உடலை மறந்து, உன் அகத்துள்ளே நிற்கும் ஆன்மாவையே பார்க்கப் பழகிக் கொள்.

5. எதை இப்பொழுது செய்ய வேண்டுமோ, அதை உடனே செய், கவனித்துச் செய், உள்ளேயிருக்கும் மெய்ப்பொருளை உணர்ந்து செய்.

6. நன்மை செய்வதும் மனித சுபாவத்திற்கு இசைந்து நடப்பதுமே உனக்கென்று வரையறுக்கப்பட்ட இயற்கைத் தர்மமாகும். இவற்றிலிருந்து பிறழாமல் உன்னை பாதுகாத்துக் கொள்.

7. உலகத்தில் நீ ஓர் அங்கம் ஆவாய். ஆகையால் உன் செயல்கள் அனைத்தும் உலக வாழ்க்கைக்கு இசைந்ததாக அமைந்திருக்க வேண்டும்.

8. உன்னுடைய வாழ்க்கை உலகத்திற்கு பயனுள்ளதாக இருக்கிறதா என சற்றே சிந்தித்துப் பார். பயனற்ற வாழ்க்கை உலகத்தின் ஒற்றுமையைக் குலைத்து விடும்.

9. நீ செய்த நன்மைக்கு பிரதிபலனைத் தேடாதே. மூடர்கள்தான் பிரதிபலனைத் தேடி அலைவார்கள்.

10. நீ செய்த உபகாரத்தை ஒருவன் மறந்து விட்டான், வேறொருவன் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டான் எனப் புலம்பாதே. உன்னையே நீ சோதித்துப் பார். தவறு உன்னுடையதே. அவனை நீ ஏன் நம்பினாய்? அவன் இயல்பு உனக்குத் தெரியாதா?

11. உன்னைத் துவேஷிக்கிறவனும் உன்னைப் பகைத்துக் குறை கூறுபவனும் இயல்பில் உன் நண்பர்களே. ஆகையால் அவர்களை நீ வெறுக்காதே. அவர்களுடைய உள்ளங்களை சற்றே அலசிப் பார்.

12. அத்தகையோர் உன்னைப் பற்றி என்ன நினைத்தாலும் பரவாயில்லை. அதைக் குறித்து வருந்தாதே.

13. உன் இயல்புக்கு ஏற்ப ஒரு காரியத்தை நீ செய்யும் பொழுது அதற்குக் கூலி கேட்கலாமா? சதா பார்த்துக் கொண்டிருக்கும் கண்கள் கைம்மாறு கேட்பதில்லை. வெகுதூரம் நடக்கும் உன் கால்களும் பிரதிபலனை எதிர் பார்ப்பதில்லையே.

14. அவை தத்தம் கருமங்களைச் செய்துவிட்டு சும்மா இருக்கும். அவற்றைப் போல் நீயும் இருக்கக் கற்றுக் கொள்.

**15.** உலகத்திற்கு நன்மை செய்யப் பிறந்தவன் நீ. அதுதானே உன் இயல்பு. நன்மை செய்த பிறகு ஆத்ம திருப்தியுடன் சும்மா இருப்பாயாக.

**16.** சக்கரம் போன்ற உன் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சம்பவமும் பராசக்தியின் சித்தத்தின் படியே நடக்கிறது.

# மனிதனின் உண்மை நிலை

# அத்தியாயம் 5

**1.** நடந்ததைப் பற்றிக் கவலைப் படாதே. நடக்கப் போவதைப் பற்றி அஞ்சாதே.

**2.** இப்பொழுது நடக்கும் காரியங்களிலேயே உன் மனத்தைச் செலுத்து. உன் வாழ்க்கைப் பயணத்தில் திடபுத்தியுடனும் பூரண அறிவுடனும் செயல்படுவாயாக.

**3.** உண்மையையே பேசு. அந்த உண்மையை தைரியமாகப் பேசு. அதனால் உன் மகிழ்ச்சிக்கு எந்தக் குறையும் நேராது.

**4.** எந்த நேரத்திலும் உன் உடலிலிருந்து உயிர் பிரிந்து செல்லலாம். எவ்வித எதிர்பார்ப்புமின்றி மரணத்தைச் சந்திக்க உன்னைத் தயார் படுத்திக் கொள்.

**5.** உன் ஆத்மாவை எப்பொழுதும் பரிசுத்தமாக வைத்துக் கொள்.

6. வெள்ளரிக்காய் கசக்கிறதா? பரவாயில்லை, அதைத் தூக்கி எறிந்து விடு. வழியில் முள்ளா? அதனாலென்ன, அவ்வழியை விட்டு சற்றே தள்ளிப் போ. அது போதும். காய் ஏன் கசக்கிறதென்றும், முள்ளை ஏன் இறைவன் படைத்தானென்றும் கேள்விகள் கேட்காதே.

7. தச்சனின் பட்டறையில் உபயோகமற்ற மரத் துண்டுகளையும் சீவல்களையும் வேறு குப்பைகளையும் நீ காண்கிறாய். பதனிடப்பட்ட தோலிலிருந்து பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையிலும் வெட்டப் பட்ட சிறு துண்டுகள் அங்குமிங்கும் கிடக்கும்.

8. "ஏன் இத்தனைத் துண்டுகள்?, ஏன் இவ்வளவு குப்பை?" என்று நீ கேட்டால் தச்சன் சிரிப்பான், தொழிலாளி நகைப்பான்.

9. அந்தக் குப்பையைப் பயன்படுத்தி வேறொரு பொருளை உற்பத்தி செய்வதைப் பற்றி தச்சன் சிந்திப்பதில்லை. ஆனால் பிரகிருதி என்ற பிரபஞ்ச தச்சனோ எந்தக் குப்பையையும் வீணாக்குவதில்லை.

10. பிரகிருதியானது குப்பையிலிருந்து புதுப் பொருள்களை உண்டாக்குகிறது. பழையதைப் புதுப்பித்து முதுமையை இளமையாக்குகிறது.

11. பிரகிருதியில் எதற்கும் எவருக்கும் இடமுண்டு.

# மனிதனின் உண்மை நிலை

## அத்தியாயம் 6

1. சூத்ரதாரி உள்ளே இருக்கிறான். அவன் உன் உள்ளத்திலிருந்து பேசுகிறான். அவனே உயிர், அவன்தான் புருஷன்.

2. அவன் வசிக்கும் இந்த உடல்தான் அவன் என்று எண்ணி மயங்கி விடாதே. உடலில் அமைந்திருக்கும் கர்மேந்திரியங்களையும் அவன் என்று எண்ணாதே.

3. தச்சனுடைய உளியைப் போன்று கர்மேந்திரியங்கள் அனைத்தும் வெறுங் கருவிகளே. உடலிலேயே சேர்த்து அமைக்கப்பட்ட விசேஷ கருவிகள்தான் இவை. இதுதான் வித்தியாசம்.

4. உள்ளே நின்று கர்மேந்திரியங்களை செலுத்துவதும் அடக்குவதும் இந்த ஆன்மாவேதான். ஆகையால் ஆன்மாவை மறந்து கருவிகளே முக்கியம் என எண்ணி விடாதே.

5. நெய்பவனுக்கு நாடாவும் எழுதுபவனுக்கு எழுத்தாணியும் வண்டியோட்டிக்குச் சாட்டையும் கருவிகளாக இருப்பதுபோல், கருமேந்திரியங்கள் அனைத்தும் ஆன்மாவின் கருவிகளேயாகும்.

6. நன்மையும் தீமையும் ஆன்மாவிலும் உண்டு.

# மனிதனின் உண்மை நிலை

# அத்தியாயம் 7

1. பிறக்கும் உயிர்கள் அனைத்தும் இறப்பது உறுதி.

2. பிறப்பைப் போன்று இறப்பும் உலகத்தில் நிகழும் இன்றியமையாத நிகழ்ச்சியாகும். இதுவே கடவுள் வகுத்த நியதியுமாகும்.

3. அறிவுள்ளவன் மரணத்தை வெறுக்க மாட்டான், அசட்டை செய்யவுமாட்டான். இறப்பின் மெய்ப்பொருளை அறிந்தவன், மரணத்தைச் சந்திக்க எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறான்.

4. தாயின் வயிற்றிலிருந்து குழந்தை பிறக்கும் நாளை எதிர்பார்ப்பதைப் போல், அடைபட்டிருக்கும் இவ்வுடலிலிருந்து உன் ஆத்மா வெளியேறுவதை நீ எதிர்பார்ப்பாயாக.

5. மாறுபட்ட மனோபாவமுடைய பல்வகை மனிதர்களிடமிருந்து மரணம் உன்னை விடுவிக்கிறது.

6. நீ இவ்வுலகத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் முன்னரே மரித்தாலென்ன? ஈசன் இட்ட கட்டளையில் தவறு எப்படி இருக்கும்?

7. எந்த சக்தி உன்னை உருவாக்கிற்றோ, அதே சக்திதான் இப்பொழுது உன்னைப் பார்த்து "போ" எனக் கூறுகிறது. ஆகையால் கலங்காமல் உன் உடலை விட்டு நீங்குவாயாக!



# பிறர் தரும் விளக்கங்களும் தொகுப்பாசிரியரின் குறிப்புகளும்

**அத்வைதம் (Advaita):**

"The philosophy of advaita, literally non-dualism, is the premier and oldest extant among the vedanta schools of Indian philosophy. The upanishadic quest is to understand Brahman, the source of everything, the Atman, the Self, and the relationship between Brahman and Atman. The upanishads explore these issues from different angles. The advaita school teaches a complete essential identity between Brahman and Atman. In other vedantic traditions, the essential relationship between Atman and Brahman is understood in different ways."

"Sankaracharya is the most important teacher of the advaita school of vedanta, and his commentaries to the upanishads, the Bhagavad Gita and the brahmasutras define the parameters of advaita thought. However, it must be remembered that all vedanta philosophy really goes back to the upanishads, and Sankaracharya is regarded as a pre-eminent teacher who continued the upanishadic tradition. The name *Sankaracharya* has become a title for the heads of the advaita institutions in India today, because of the great respect and fame associated with it."

"The swan has a special association with advaita vedanta. The swan is called *hamsa* in the Samskrta language. The greatest masters in the advaita tradition are called *paramahamsas* – the great swans. The word *hamsa* is a variation of *so'ham* : I am He, which constitutes the highest realization. Therer are other equivalences between the swan and the advaitin, that make the swan a particularly apt symbol for advaita vedanta. The swan stays in water, but its feathers remain dry. Similarly, the advaitin lives in the world, yet strives to remain unaffected by life's ups and downs."

"In India, the swan is also mythically credited with the ability to separate milk from water. Similarly, the advaitin discriminates the eternal Atman from the non-eternal world. The Atman that is Brahman is immanent in the world, just like milk is seemingly inseparably mixed with water, but It can never be truly realized without the right discrimination between the eternal and the ephemeral. The swan is thus a symbol for the *jivanmukta*, who is liberated while still alive in this world, by virtue of having realized Brahman."

Excerpted from: *The Advaita Vedanta Home Page*
http://www.advaita.-vedanta.org/avhp/

**அன்பு:**

**மனிதநேயமும் அன்பும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் மிக முக்கிய அம்சங்களாக விளங்கின. அவருடைய போதனைகளில் அன்பிற்கு அதிக**

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் செய்த அற்புதங்களும் இந்த அன்பையே பிரதிபலிக்கின்றன. இயேசு நாதர் வெளிப்படுத்திய அன்பைக் குறித்து திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார் அவர்கள் 1992-ஆம் ஆண்டு கூறியதாவது: "நான் தெய்வீகத்தில் வேள்வியில் இருந்த சமயம் இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பற்றி ஆழமாக சிந்தித்து மனதுருகினேன். அந்த உத்தம புருஷனை மக்கள் நிந்தித்து, அடித்து, கொலை செய்கின்ற சமயத்திலும் அவர் என்ன சொன்னார்? 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாது இருக்கிறார்களே' என்றல்லவா அவர் இறைவனிடம் மன்றாடினார்."

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அப்போஸ்தலனாகிய பவுல் என்ற யூத மறைஞானியின் மூலமாக இயேசு கிறிஸ்துவின் போதனைகள் பல்வேறு மக்களிடையே வேகமாகப் பரவின. அன்பு ஒருக்காலும் ஒழியாது என்பதை வலியுறுத்தி அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்; 13ம் அத்தியாயத்தில், இப்படிக் கூறுகின்றார்.

1. நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.
2. நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.
3. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

4. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.
5. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது.
6. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.
7. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.
8. அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்.
9. நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க தரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது.
10. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.
11. நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன். நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.
12. இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்.
13. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது.

► **கிறிஸ்தவர்களின் வேதமாகிய "பரிசுத்த வேதாகமம்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.**

**அஷ்டாங்க யோகம்:**

இதுவே இராஜயோகம் எனவும் அழைக்கப் படுகிறது. கீழ்க் காணும் எட்டுப் படிகளை உள்ளடக்கியது. திருமூலர் அவற்றை இப்படி வரிசைப் படுத்தியுள்ளார்.

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயா மம் பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே. **(திருமந்திரம் 552)**

(1) இயமம்: கொல்லாமை, வாய்மை, களவு புரியாமை, நெறி தவறாமை, எந்தவொரு கொடையும் பெற்றுக் கொள்ளாமை.

(2) நியமம்: மனத் தூய்மை, உள்ளதைக் கொண்டு மன நிறைவு அடைதல், தவ நெறியில் நிற்றல், கசடறக் கற்றல், எல்லாம் வல்ல இறைவனிடம் சரண் அடைதல்.

(3) ஆசனம்: உள்ளமும் உடலும் உறுதிபெற செய்யப் படும் பல்வேறு யோகாசனப் பயிற்சிகள்.

(4) பிராணாயாமம்: பிரபஞ்சத்திலுள்ள பிராண சக்தியை அடக்கி ஆளும் பயிற்சி.

(5) பிரத்யாஹாரம்: நம் மனத்தின் ஆற்றல்கள் ஐம்பொறிகளின் வாயிலாகப் புறத்தில் போய் சிதறடிக்கப்பட்டு வீணாக செலவழிக்கப்படுகின்றன. அதைத் தடுத்து, மனத்தின் ஆற்றல்களை குவித்தலே பிரத்யாஹாரம் எனப்படும்.

**(6)** ***தாரணை:* ஏதாவது ஓரிடத்தில் சித்தத்தை நிலை நிறுத்துவதே தாரணை என அழைக்கப் படுகிறது. எடுத்துக் காட்டாக, இதயக் கமலம் ஒளி மயமாக இருப்பதாக எண்ணிக் கொண்டு, அந்த ஒளியின் மீதே சித்தத்தை நிலை நிறுத்துவது தாரணையாகும்.**

**(7)** ***தியானம்:*** "வெளியிலோ அல்லது உள்ளேயோ மனத்தை ஒரு பொருள் மீது நிறுத்தப் பயிற்சி அளித்த பிறகு, அது இடைவிடாது தொடர்ந்து அப்பொருளை நோக்கி ஒரே வழியில் ஓடும் சக்தியைப் பெறுகிறது. இதைத்தான் தியானம் என்பர்." – **சுவாமி விவேகானந்தர்.**

**(8)** *சமாதி:* "ஒருவன் ஆழ்ந்த தியானம் பழகியதன் பயனாக, தான் தியானிக்கும் பொருளின் வெளி தோற்றத்தைப் புறக்கணித்து அதன் உள் பாகத்தில் மட்டும், அதனுடைய கருத்தை மட்டும் தியானிக்கும் பொழுது அதைச் சமாதி என்கிறோம்.. .. தாரணை, தியானம், சமாதி, இந்த மூன்றும் ஒன்றாகச் சேர்ந்தால் சம்யமம் ஆகும்" — **சுவாமி விவேகானந்தர்.**

"மனத்தை ஒரு பொருளின் மீது பன்னிரண்டு நொடிகளுக்கு நிலை நிறுத்தினால் அது தாரணை எனப்படும். பன்னிரண்டு தாரணைகள் ஒரு தியானம். பன்னிரண்டு தியானங்கள் ஒரு சமாதி" — **கூர்ம புராணம்.**

## Buddha's Ten Rules for Good Government:

"In the ***Jataka***, the Buddha had given 10 rules for Good Government, known as ***'Dasa Raja Dharma.'*** These ten rules can be applied even today by any government which wishes to rule the country peacefully.

The rules are as follows:

(a) Be liberal and avoid selfishness.

(b) Maintain a high moral character.

(c) Be honest and maintain absolute integrity.

(d) Be kind and gentle.

(e) Be prepared to sacrifice one's own pleasure for the well-being of the subjects.

(f) Lead a simple life for the subjects to emulate.

(g) Be free from hatred of any kind.

(h) Exercise non-violence.

(i) Practise patience, and

(j) Respect public opinion to promote peace and harmony.

▶Excerpted from K. Sri Dhammananda's "**What Buddhists Believe**".

## இந்நூலில் காணப்படும் இறைவனின் பல பெயர்கள்:

- நுணுக்கரிய நுண்ணுணர்வு.
- நள்ளிரவில் நட்டம் பயிலும் நாதன்.
- பிரபஞ்சத்தை இயக்கும் பரம் பொருள்.
- அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பேராற்றல்.
- பேரானந்தம்.
- சித்தி நாயகன்.
- ஒளி வடிவானவன்.
- அருட் பெருஞ்சோதி.

### பஞ்ச பூதங்கள்:

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்.

### பஞ்ச விகாரங்கள்:

காமம், குரோதம், லோபம், மோஹம், அகங்காரம் எனும் ஐந்து மன மாசுகளையும் பஞ்ச விகாரங்கள் என அழைக்கிறோம். இவற்றை ஆங்கிலத்தில் முறையே sexuality, anger, greed, attachment, ego என குறிப்பிடுகிறோம். இப்பஞ்ச விகாரங்களோடு, மதம், மாச்சரியம் எனும் வேறு இரண்டு மன மாசுகளும் சேர்ந்து கொண்டு மனிதனை ஆட்டிப் படைக்கின்றன.

## மதம் (Religion):

"மதம் என்றால் என்ன?" என்ற தலைப்பில் 17-6-1900 அன்று பேசிய சுவாமி விவேகானந்தர் இப்படியொரு கருத்தைக் கூறிச்சென்றுள்ளார்.

"கடவுளைப்பற்றிய குறுகிய கருத்துக்கள் அனைத்தையும் முதலில் அகற்றுங்கள். அவரை அனைவரிடமும் காணுங்கள். அவரே எல்லா கைகள் மூலமாகவும் செயல்புரிகிறார், எல்லா கால்கள் மூலமாகவும் நடக்கிறார், எல்லா வாய் வழியாகவும் உண்கிறார், ஒவ்வொருவரிலும் அவர் வாழ்கிறார். எல்லா உள்ளங்களின் மூலமும் அவர் சிந்திக்கிறார். அவர் சுயம் நிரூபணமானவர். அவர் நம்மைவிட நமக்கு அருகில் இருக்கிறார். இதை அறிவதே மதம், இதுதான் நம்பிக்கை. இந்த நம்பிக்கையை இறைவன் நமக்கு அருள்வாராக."

"இந்த ஒருமையை உணரும்போது நாம் அமரர்களாகி விடுவோம். பௌதீக நோக்கில் பார்த்தால்கூட நாம் அமரர்களே, ஏனெனில் நாம் பிரபஞ்சத்துடன் ஒன்றாவோம். இந்தப் பிரபஞ்சத்தில் ஓர் உயிர் இருக்கும் வரையில் நான் அதில் வாழ்வேன். எல்லைக்கு உட்பட்ட இந்தச் சிறியவன் அல்ல நான், நான் பிரபஞ்ச வடிவினன். மறைந்து போனவர்களுடைய உயிரெல்லாம் நானே. புத்தரின், ஏசுவின், முகமதுவின் ஆன்மா நானே, எல்லா ஆச்சாரியர்களின் ஆன்மா நானே, கொள்ளையடித்த கள்வர்கள் நானே, கொலை புரிந்து தூக்கிலிடப்பட்டவர்கள் நானே, அகிலமும் நானே."

▶ "**சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்**" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.
1997-ஆம் ஆண்டு பதிப்பு.

## Mysticism:

Mysticism is concerned with the nature of reality, the individual's struggle to attain a clear vision of reality, and the transformation of consciousness that accompanies such a vision.

There is a reality beyond the material world which is uncreated. It pervades everything, but remains beyond the reach of human knowledge and understanding.

You approach that reality by:

- distinguishing ego from true self;
- understanding the nature of desire;
- becoming unattached;
- forgetting about preferences;
- not working for personal gain;
- letting go of thoughts;
- redirecting your attention;
- being devoted;
- being humble;
- invoking that reality; and
- surrendering.

That reality approaches you through Grace and the Teacher.

You are transformed so that you embody that reality by:

- dying and being reborn;
- seeing the light;
- experiencing union; and
- experiencing freedom.

Excerpted from: ***Sufism / Islamic Mysticism.***
(http://www.digiserve.com/mystic/Muslim/F_start.html)

**Guru Nanak** (1469 - 1538 A.D.), the founder of Sikhism, "deprecated all forms and formalities and gave new definitions to words. When asked to what religion he belonged, he said in his cryptic way:

'**Religion** consisteth not in a patched coat, or in yogi's staff, or in smearing ashes over the body.
**Religion** consisteth not in the ear-rings being worn, or in a shaven head, or in the blowing of the horns,
**Religion** consisteth not in mere words;
**Religion** consisteth not in wandering in foreign countries, or in bathing at places of pilgrimages.
**Abide pure amid the impurities of the world; thus shalt thou find the way to religion.' "**

▶ Excerpted from Bankey Behari's ***"Sufis, Mystics and Yogis of India."*** Published by Bharatiya Vidya Bhavan, Mumbai, India. 1991.

## சூரிய காயத்ரீ என அழைக்கப்படும் பிரம்ம காயத்ரீ:

**ஓம் பூர்புவஸ்ஸுவ:**
**ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி ।**
**தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥**

"யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக."

## திருமூலர் காட்டிய நன்நெறி:

"திருவாசகம் அன்பினையும் பத்திமை ஞானத்தையும் அடைவதற்கு வழிகாட்டும் தேன் போன்ற பாடல்களைக் கொண்டது. திருமந்திரம், ஆன்மா ஞானத்தைப் பெற யோகம் முதலான சாதனைக்குரிய, பயிற்சிக்குரிய வழிகளை விளக்கும் ஒப்பற்ற நூல். வடமொழியில் பதஞ்சலி யோக சூத்திரங்களை விளக்கியிருப்பதுபோல் யோகநெறியைத் தமிழில் சொல்லியவர் திருமூலர். சன்மார்க்கம் என்பது ஞானவழி. அறிவால் இறைவனையடையும் ஞானவழியை, சன்மார்க்கத்தை முதன்முதல் தமிழில் சொல்லியவர் திருமூலர் ஆவார்."

"குருநெறி என்றும் சிவநெறி என்றும் போற்றப்படும் சன்மார்க்கநெறி திருமூலர் அருளிச்செய்தது. இறைவனே குருவாய் எழுந்தருளி அருள் செய்வான் என்பதும், அவ்வாறு குருவருளனுபவம் பெற்றவர் தம் மாணவர்க்கு அருளிச்செய்வர் என்றும் திருமூலர் உணர்த்தினார்."

▶ முனைவர் பெ. சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய "**சான்றோர் காட்டிய சமயச் செந்நெறிகள்**" என்னும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது. முனைவர் தமிழ்க்குயில் கா. கலியபெருமாள் அவர்கள் தொகுத்தளித்துள்ள "**உலகத்தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம்**" என்னும் நூலில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.

## வள்ளலார் கண்ட இறைநெறி:

"சில சமய நெறிகள் இறைவனை உருவம் உடையவன் எனக் கூறும். மற்றும் சில அருவம் எனக் கூறும். உருவம் புரிந்து கொள்ளக் கூடியது. தியானத்தில் வைப்பதற்கு எளியது. அருவம் இவ்விரண்டு தன்மையாலும் அரியது. வள்ளலார் இவ்விரண்டும் அல்லாத, யாவருக்கும் பொதுவான, எளிமையான இறைநிலையைக் குறிப்பிட்டார். அதுவே அவனைக் கருணை என்னும் பண்பாகவும், அருள் என்ற ஆற்றலாகவும், சோதி வடிவாகவும் கொண்டு தியானம் செய்தல். அதாவது இடைவிடாது நினைத்தல்; ஒன்றிய மனத்துடன் நினைத்தல். இது வள்ளலார் கண்ட இறைநெறி. உயிரின் பண்பு, கருணை, தயவு என்பதும் இரக்கம் என்பதும் இதுவே. சாதி, சமயம், இனம் முதலிய செயற்கை வேறுபாடுகளால் உயிரின் இயற்கைக் குணம் ஆகிய தயவு மறைக்கப்படக் கூடாது. இந்த வேறுபாடுகள் நீங்க வேண்டும். தயவு மலர வேண்டும். துன்பம் நீக்கும் பணியை மக்கள் சாதி கடந்து, சமயம் கடந்து, நாடு கடந்து, இனம் கடந்து செய்ய வேண்டும்."

▶ பேராசிரியர் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் எழுதிய "**வள்ளலார் கண்ட ஒளிநெறி**" என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரை, முனைவர் கா.கலியபெருமாள் அவர்களின் "**உலகத்தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம்**" என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

## வேள்வியின் நோக்கங்கள்:

திருமூர்த்தி மகரிஷி பரஞ்சோதியார் கீழ்க் காணும் முக்கிய நோக்கங்களுக்காக உலக நல மகா தவ வேள்வி செய்து வருகின்றார்.

1. ஞானமும் அரசியலும் விரைவில் ஒன்றுபடுவதற்காக.
2. "உங்களை நம்புங்கள்" என்ற தத்துவத்தை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்வதற்காக.
3. ஆசைகள் பூர்த்தியடையாது திடீரென்று இறந்தவர்களின் ஆத்மாக்களுக்காக.
4. இனி பிறக்கக்கூடியவர்களின் ஆன்மாக்கள் நல் ஆன்மாக்களாக இருக்க வேண்டும் என்பதற்காக.
5. உலக மக்களின் உள்ளங்களெல்லாம் குளிர வேண்டும் என்பதற்காக.
6. "நான்" என்ற தத்துவத்தை அறிந்ததனால் ஏற்பட்ட ஆனந்தத்தை மக்களோடு பகிர்ந்து கொள்வதற்காக.
7. காய சுத்தி செய்வதற்காக.
8. உலகத்தில் பெரிய மாற்றத்தையும் சத்திய யுகத்தையும் ஏற்படுத்துவதற்காக.
9. பிரபஞ்சத்தை இயக்கக் கூடிய உறுபொருளின் தன்மையை உணர்த்துவதற்காக.
10. மனிதன் மனத் தூய்மை பெற்று சந்தோஷம் அடைவதற்காக.
11. தனி மனித சமாதானத்தின் மூலம் உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக.
12. அறிவையும் ஆற்றலையும் ஒன்றுபடுத்தி கடமைகளை எங்ஙனம் செவ்வனே செய்ய வேண்டும் என்பதை மக்கள் மனத்தில் உணர்த்துவதற்காக.
13. இறை உணர்வின் மூலம் மக்களை ஒன்றிணைப்பதற்காக.
14. குருவின் கடமையைச் செய்வதற்காக.

# இந்நூலிலிருந்து நான் தெரிந்து கொண்டவை

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

9.

10.

## உலக சமாதானத்திற்காக

## <u>எனது எதிர்காலத் திட்டங்கள்</u>

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

9.

10.



# எனது குறிப்புகள்

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

9.

10.

11.



# மகரிஷியின் பொன்மொழிகள்

1. மெய்ஞ்ஞானத்தையும் அரசியலையும் ஒன்றிணைத்து இந்த உலகை உயர்த்துவோம்.

2. உருக்கத்தோடு இரு கண்களிலும் நீர் மல்க இறைவனை வணங்கினால் அவனருள் நிச்சயம் உங்களுக்குக் கிட்டும்.

3. இப்பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றல் எதுவோ, அதுவே உன்னிடத்தில் இருக்கின்றது.

4. மனம் எப்பொழுது தூய்மை பெறுகின்றதோ, அப்பொழுதுதான் இறைவன் அந்த மனத்தினுள் குடி கொள்கிறான்.

5. மன அமைதிக்கு ஆதாரமாக இருப்பது நற்சிந்தனை.

6. ஜனனமும் மரணமும் இந்த உடலுக்குத்தானே தவிர ஆத்மனுக்கு அல்ல.

7. அனந்தமான யுகங்களில் உன் ஆயுள் ஒரு நொடிப்பொழுது என்பதை மறந்துவிடாதே. உலக நிகழ்வுகளோடு ஒப்பிடுகையில் உன் வாழ்வு ஓர் அணுவைப்போன்றது.